தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 321

# மரியாதைராமன் கதைகள்

(ஆய்வுப் பதிப்பு)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

[ விலை ரூ. **22—00**

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 321.

# மரியாதைராமன் கதைகள்

(ஆய்வுப் பதிப்பு)

பதிப்பாசிரியர் :

**முனைவர் ய. மணிகண்டன்,**
எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
தமிழ்ப்பண்டிதர், தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்**

**தஞ்சாவூர்.**

2001 ] [ விலை. ரூ. 22—00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | மரியாதைராமன் கதைகள் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் ய. மணிகண்டன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 321 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | மே, 2001 |
| தாள் | : | 14. 2 கி.கி. டி.எண்.பி.எல். |
| நூல் அளவு | : | 21 x 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 112 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலக அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | கதை இலக்கியம் |
| விலை | : | ரூ. 22—00 |

### இரண்டாம் பதிப்பின்

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுப பயனை அளித்துவரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலக மாகும். இந்நூலகம் நூற்கருவூலமாகத் திகழ்கிறது; சுவடிக் களஞ்சியமாகத் துலங்குகிறது; ஆய்வு மேற்கொள்ளும் மொழித்துறைகளால் மிளிர்கிறது; பதிப்புப் பணிகளால் பாங்குறு வண்ணத்தோடு பளிச்சிடுகிறது. இந்நிறுவனத் தின் நூல் வெளியீடுகள் கலை, இலக்கியம், மருத்துவம் எனப் பல எழிற்கோலங்களைப் பூண்டு பவனி வருகின்றன.

அவ்வாறான நூல் வெளியீடுகளுள் ஒன்றாக 1991இல் முதற்பதிப்பாக வெளிவந்த நூலே "மரியாதைராமன் கதைகள்" எனும் இக்கதையிலக்கிய நூலாகும். நூலார்வ லரிடையே இந்நூல் பெற்ற பெருவரவேற்பையடுத்து இப் பொழுது இவ்விரண்டாம் பதிப்பு வெளிவருகின்றது.

இந்நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள 1830ஆம் எண்ணுடைய ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந் நூலினைப் பதிப்பித்து அளித்துள்ளவர் இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் முனைவர் ய. மணிகண்டன் அவர்க ளாவார். இவ்விரண்டாம் பதிப்பினை அவர் முதற்பதிப் பினும் சிறப்பான முறையில் வளப்படுத்தியுள்ளார். மரியாதைராமன் கதைகளைப் பலரும், பொதுவாக, மக்களிடையே பரவலாக வரவேற்புப்பெற்ற கதைகள் என்று மட்டுமே அறிவர். இக்கதைகள் கி. பி. 1872-லேயே ஆங்கிலத்தில் அயல்நாட்டு அறிஞரான எட்வர்டு ஜவிட் ராபின்சன் என்பவரால் செய்யுள் வடிவில் நூலாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பது நமக்கெல்லாம் வியப்பூட்டும் அரிய செய்தியாகும். இவ்வரிய செய்தியைத்தந்து அதனை எடுத்துக்காட்டுவதுடன், மரியாதைராமன் கதையொன்றை

விக்கிரமாதித்தன் கதையொன்று ஒத்து அமைந்துள்ளமையையும், மரியாதைராமன் கதையொன்றைப் பஞ்சதந்திரக் கதையொன்று ஒத்து அமைந்துள்ளமையையும் இப்பதிப்பாசிரியர் இவ்விரண்டாம் பதிப்பில் பிற்சேர்க்கைப் பகுதியில் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் மரியாதை ராமன் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ள இலக்கியப் பகுதிகள், இக்கதைகளில் இடம்பெற்றுள்ள பழமொழிகளின் அடைவு, அருஞ்சொற்பொருள், அரிய பதிப்பியற் குறிப்புகள் அமைந்த முகவுரை ஆகியவற்றையும் இப்பதிப்பில் பதிப்பாசிரியர் இடம்பெறச்செய்துள்ளார். இவ்வாறு இவ்விரண்டாம் பதிப்பை மிளிரச் செய்துள்ள பதிப்பாசிரியர் முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இவ்விரண்டாம் பதிப்பு வெளிவரத் தேவையான நிதியுதவியினை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

இப்பதிப்பு சிறப்பாக வெளிவர ஆவனசெய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு சாமி. சிவஞானம் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் என் பாராட்டுகள்.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுள்ள சரசுவதி மகால் நூலக அச்சக ஊழியர்களுக்கும், இந்நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் பாராட்டுகள்.

பொதுவாகக் கதையிலக்கிய ஆர்வலர்களுக்கும், சிறப்பாக நாட்டுப்புறவியல் அன்பர்கள்-ஆய்வாளர்களுக்கும் இந்நூல் நல்விருந்தாகும். இந்நூல் முதற்பதிப்பில் பெற்ற வரவேற்பை இவ்விரண்டாம் பதிப்பிலும் பெறும் என நம்புகிறேன்.

**மு. இராசாராம்,** இ. ஆ. ப.,

தஞ்சாவூர் — *மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,*

*29—5—2001* — *சரசுவதி மகால் நூலகம்*

முதற்பதிப்பின்

# வெளியீட்டாளர் முன்னுரை

பல காலமாக மக்களிடத்திலே செல்வாக்குடன் வழங்கி வருகின்ற கதைகளாக எண்ணற்றவை அமைந்திருக்கின்றன. இவற்றில் வாய்மொழியாகச் சொல்லப்பெற்று வாய்மொழி இலக்கியமாக விளங்குபவை பல. மரியாதைராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள், தெனாலிராமன் கதைகள் முதலியன அவ்வகையினவாகும். நுட்பமான அறிவுக் கூர்மையை வெளிப்படுத்துவனவாகவும் படிப்பதற்குச் சுவையானவையாகவும் இக்கதைகள் அமைந்திருக்கின்றன.

மகாலில் இடம்பெற்றுள்ள 1830 ஆம் எண்ணுடைய சுவடியில் எழுதப்பெற்றுள்ள மரியாதைராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள் ஆகியவற்றில் இங்கு மரியாதை ராமன் கதைகள் மட்டும் நூலாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. இன்று அச்சு வடிவில் உலவிக்கொண்டிருக்கும் இக்கதை களைக் கூறும் நூல்களுக்கும் இச்சுவடியில் உள்ள நூலின் கதைகளுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படு கின்றன. அவை ஆய்வாளர்களைத் தூண்டி அவர்தம் ஆய்வுக்குப் பயன்படும் என்று நம்புகின்றேன்.

இச்சுவையான கதைகள் சுவைஞர்கள் அனைவரையும் ஈர்க்கும்; ஆய்வாளர்களுக்கு ஆய்வு மூலங்களாகப் பயன் படும். சுவைஞர்க்கும், ஆய்வாளர்க்கும் ஒருசேரப் பயன் படும் இந்நூலைத் திரு ய. மணிகண்டன் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகள்.

வழக்கம்போல், இந்நூல் வெளியீட்டுக்கு நிதியுதவி செய்கின்ற நடுவண் அரசுக்கு என் நன்றியை உரித்தாக்கு கின்றேன். நூலை அழகாக அச்சிட்டுத் தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்குப் பாராட்டுகள்.

தஞ்சாவூர், | மு. சதாசிவம்,
30—5—91. | இயக்குநர்.

# உள்ளுறை


பக்க எண்

✳ பதிப்பாசிரியர் முகவுரை 1—16

**மரியாதைராமன் கதைகள் — நூல்**

1. திருடர்கள் நால்வரில் ஒருவன் மற்றவரை மோசஞ்செய்தது 1—3
2. தன் குழந்தையைக் கொன்று சக்களத்திமேல் பழிபோட்டது 4—7
3. பஞ்சு வர்த்தகருக்கு ஒரு பூனையால் வழக்கு நேரிட்டது 8, 9
4. ஒருவன் தன்னிடத்தில் வைத்த முத்தை இல்லை என்றது 10, 11
5. ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலிதின்றது என்றது 12, 13
6 ஒருத்தி கடன் வாங்கின நெய்யை வாங்கவில்லை என்றது 1 15
7. உனக்கு இஷ்டமானதைக் கொடு என்றது 16
8. வழியில் வித்துவான் திரவியத்தைப் பிடுங்கிக்கொண்டது 17
9. தான் வாங்கின செம்புக்கல்லை அறியேன் என்றது 18, 19

பக்க எண்

10. அயலான் பெண்சாதியைத் தன் பெண்சாதி என்றது — 20, 21

11. யானைக்கும் பானைக்கும் சரி என்றது — 22, 23

12. சீட்டைக் கிழித்துக் கடன் வாங்கினதை இல்லை என்றது — 24, 25

13. எலுமிச்சங்காய் அளவு சாதம் போடச்சொன்னது — 26, 27

14. இரவல் வாங்கின மோதிரத்தை அறியேன் என்றது — 28, 29

15. கோழி திருடி அறியேன் என்றது — 30, 31

16. வைத்த பணத்தைத் திருடிக்கொண்டு அறியேன் என்றது — 32—34

17. நெல் ஒப்பந்தக்காரன் விலை மோசம் செய்தது — 35—37

18. ஒருவன் காதுக்கடுக்கனை மற்றொருவன் திருடியது — 38, 39

19. ஒருவன் மற்றொருவனின் பசுவின் கன்றுகளை மாற்றியது — 40—42

20. நால்வர்ப் பொதுவிலிருந்த ரத்தினத்தை அவர்களில் ஒருவன் திருடியது — 43—46

21. நவமி புருஷனுடைய பெருமையைத் தெரிவிக்குதல் — 47—50

பக்க எண்

✳ அருஞ்சொல் அகர நிரல் 51—54

✳ மரியாதைராமன் கதைகளில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் 55, 56

✳ பிற்சேர்க்கை—1
இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மரியாதைராமன் பற்றிய குறிப்புகள் 57

✳ பிற்சேர்க்கை—2
மரியாதைராமன் கதைகள் சில முற்பதிப்பு நூல்கள் குறித்த விவரங்கள் 58—60

✳ பிற்சேர்க்கை—3
மரியாதைராமன் கதைகளுளொன்றை (கதை எண்: 5) ஒத்த பஞ்சதந்திரக் கதை 61—64

✳ பிற்சேர்க்கை—4
மரியாதைராமன் கதைகளுளொன்றை (கதை எண்: 20) ஒத்த விக்கிரமாதித்தன் கதை 65—75

✳ பிற்சேர்க்கை—4அ
ஒத்த விக்கிரமாதித்தன் கதை 76—78

✳ பிற்சேர்க்கை—5
ஆங்கிலத்தில் மரியாதைராமன் கதைகள் 79—86

✳ துணை நூற்பட்டியல் 87, 88

# பதிப்பாசிரியர் முகவுரை

(மரியாதைராமன் கதைகள் — பதிப்பியல் நோக்கில்
சில குறிப்புகள்)

மரியாதைராமன் கதைகள் இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இவ்வேளையில், முதற்பதிப்பு வெளிவந்த காலத்திற்குப்பின் இக்கதைகள் தொடர்பாக என்னால் தொகுக்கப்பெற்ற சில அரிய குறிப்புகளை இங்குப் பதிவுசெய்கிறேன். அவற்றோடு இப்பதிப்பினைக் குறித்தும், மரியாதைராமன் கதைப்பதிப்புகள் குறித்தும் குறிப்பிடத் தக்க செய்திகளையும் இங்கே அளிக்கின்றேன். இச்செய்திகள் இக்கதையிலக்கிய ஆர்வலர்க்கும் அன்பர்களுக்கும் பயன்மிக நல்கும் பான்மையனவாகும்.

## புகழ்மிகு கதையிலக்கியங்கள் :

விக்கிரமாதித்தன் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர்—அப்பாஜி கதைகள், மரியாதைராமன் கதைகள் முதலியன மக்களிடையே பரவலாக வரவேற்புப் பெற்ற கதையிலக்கியங்கள் ஆகும். இவற்றுள் 'மரியாதைராமன் கதைகள்' தமிழ் மண்ணைக் களனாகக் கொண்டு தோன்றிய கதைகளாகக் காட்சி தருகின்றன. இருநூற்றாண்டுகளாக மரியாதைராமன் கதைகள் தமிழ் மக்களிடையே வழங்கிவருகின்றமைக்குச் சான்றுகளும் உள்ளன. இக்கதைகள் வெறும் பொழுது

போக்குச் சுவையை அளிக்கும் கதைகளாக மட்டுமல்லாமல் அறிவுக்கு விருந்தாகும் படைப்புகளாகவும் விளங்குகின்றன.

**மரியாதைராமன் கதைகள் :**

மரியாதைராமன் சோழநாட்டைச் சார்ந்தவனாக இக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றான். மரியாதைராமன் என்னும் பாத்திரத்தின் மதிநுட்பத்தை மையமாகக்கொண்டு பின்னப்பெற்ற இக்கதைகள், மரியாதைராமனை ஓர் உண்மைப்பாத்திரமாகப் பலரின் உள்ளங்களிலும் பதியச் செய்துள்ளன. மரியாதைராமன் கதைகள் நாட்டுப்புறவியல் தன்மையுடைய கதைகளாக இருப்பதையும் நீதிக்கதைகள் பலவும் அவன் பெயரால் வழங்குவதையும் அறிஞர் தெ. பொ. மீ. குறிப்பிட்டுள்ளார்.*

**இலக்கியங்களில் மரியாதைராமன் பற்றிய குறிப்புகள் :**

அண்மை நூற்றாண்டுகளில் தோன்றிய செங்குந்தர் துகில்விடுதூது, சங்கரமூர்த்தி விறலிவிடுதூது, நம்பிச் சதகம் ஆகிய இலக்கியங்களில் மரியாதைராமன் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

---

* " Mariyathay—Raman " is usually thought of as the minister of the Krishna Deva Raya; but in the folklore he has also become a tradition, gatharing all Tales of Justice arround his name.

—T. P, Meenakshisundaran,
Foreword, Tamil Wisdom,
P. vii.

'திருக்குறுங்குடி நம்பி பேரில் நம்பிச்சதகம்' என்னும் இலக்கியம் 18ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகும். இவ்விலக்கியத்தைப் படைத்தவர் 'வரராமயோகி' என்னும் வலிய மேலெழுத்து யோகிச்வரன் ராமன்பிள்ளை என்பவர் ஆவார். அவ்விலக்கியத்தில், மரியாதைராமன் கதைகளில் பத்தாம் கதையான ''அயலான் பெண்சாதியைத் தன் பெண் சாதி என்றது'' எனும் கதை,

" கொண்ட காதலன்முன்
சரியாய் மறுச்சொன்ன வனுக்குப் பாரிஇத் தையலென்ற
மரியாதி ராமன் கதைபோல் " (நம்பிச்சதகம்—81)

எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

தோன்றிய காலத்தை அறியச்சான்றுகள் கிடைக்காத, இருநூறு ஆண்டுப் பழமையுடையனவாய்த் தோற்றும் 'செங்குந்தர் துகில்விடுதூது' எனும் நூலும், 'சங்கர மூர்த்தி விறலிவிடுதூது' எனும் நூலும், மரியாதைராமனின் வழக்காயும் திறத்தை ''மரியாதைராமனெனத் தீரா வழக்கைத் தெரிந்துரைத்து'' (அடி எண் 112—114), '' மரியாதைராமனைப்போல் வந்த வழக்காயும் பெரியோர் '' (அடி எண் 798—800) என முறையே குறிப்பிட்டு அமைகின்றன.

### மரியாதைராமன் கதையும் பஞ்சதந்திரக் கதையும் :

பஞ்சதந்திரக் கதைகளுள் ஒன்று மரியாதைராமன் கதைகளுள் ஒன்றாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மரியாதைராமன் கதைகளுள் ஒன்றாக இடம்பெற்றுள்ள கதை "ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலி தின்ற தென்றது" என்னும் தலைப்பில் அமைந்ததாகும். இக் கதை வடமொழிப் பஞ்சதந்திரக்கதை மூலத்திலும், தமிழில் அக்கதைகள் செய்யுள் வடிவில் ஆக்கப்பட்டுள்ள இலக்கியங் களான வீரமார்த்தாண்ட தேவர் இயற்றிய 'பஞ்சதந்திரப் பாடல்', இயற்றியவர் பெயர் அறியப்படாத "செழியதரையன் பஞ்சதந்திரம்" ஆகியவற்றிலும் காணப்படுகின்றது. (காண்க. பிற்சேர்க்கை 3).

பஞ்சதந்திரக் கதை நூல்களில் இடம்பெற்ற இக்கதை யில் வழக்கைத் தீர்த்து வைத்த நீதிபதிக்கும் அரசனுக்கும் முக்கியத்துவம் தரப்படவில்லை. மரியாதைராமன் கதை களில் இக்கதை இடம்பெறும்பொழுது, அந்த நீதிபதியாக மரியாதைராமன் இடம்பெறுவதோடு தன் தீர்ப்பால் அவன் முக்கியத்துவமும் பெற்றுவிடுகின்றமையை நாம் காண முடிகின்றது.

## மரியாதைராமன் கதையும் விக்கிரமாதித்தன் கதையும் :

பஞ்சதந்திரக் கதைகளில் ஒன்று மரியாதைராமன் கதை களில் இடம்பெற்றுள்ளதைப் போலவே, விக்கிரமாதித்தன் கதைகளில் ஒன்றும் மரியாதைராமன் கதைகளில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. அக்கதை மரியாதைராமன் கதைகளிலும் விக்கிரமாதித்தன் கதைகளிலும் கதைக்குள் கதையாகவே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரியாதைராமன் கதைகளில் ஒன்று, 'நால்வர்க்குப் பொதுவிலிருந்த ரத்தினத்தை அவர்களில் ஒருவன் திருடி யது' என்னும் கதையாகும். இக்கதை விக்கிரமாதித்தன்

கதைகளில் இரண்டாம்படிக்குக் காவலாகிய மதனாபிஷேக வல்லிப் பதுமை சொல்லிய வேதாளக் கதைகளில் ஒன்றினை ஒத்ததாகும். கதைக்குள் கதையாக விக்கிரமாதித்தன் கதைகளில் இடம்பெறும் ஒப்புமை கொண்ட இக்கதையின் தலைப்பு 'மதனசேனையின் கதை' என்பதாகும்.

வேதாளம், விக்கிரமாதித்தனைக் கேள்வி கேட்க இக் கதையைச் சொல்லியது. இக்கதை சிறு மாறுதல்களுடன் மரியாதைராமன் கதைகளில் இடம்பெற்றுள்ளது மரியாதை ராமன், சகோதரர் நால்வரில் திருடனைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு இக்கதையைச் சொல்லிக் கதையில் வருபவரில் யார் சிறந்தவன் என்று, வேதாளம் விக்கிரமாதித்தனிடம் கேட்பது போலவே கேட்கிறான். கதையில் வரும் திருடனே சிறந்தவன் என்று சொல்லிய விக்கிரமாதித்தன் அங்குச் சரியான பதில் கூறியவனாக ஆகின்றான். இங்கோ 'திருடனே சிறந்தவன்' என்று கூறிய ஒரு சகோதரன் குற்ற வாளி என்று பிடிபடுகிறான். (பதிப்புகளுக்கேற்ப இக்கதை யில் சிறுசிறு மாறுதல்கள் காணப்படுகின்றன.)

## ஆங்கில மொழிபெயர்ப்புகளில் மரியாதைராமன் கதைகள் :

மரியாதைராமன் கதைகள் அயல்நாட்டாரையும் ஆங்கில எழுத்தாளர்களையும் ஈர்த்துள்ளது. அதன் விளைவாக இக்கதைகள் செய்யுள் வடிவிலும், உரைநடை வடிவிலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எட்வர்ட் ஜ்விட் இராபின்சன் (Edward Jewitt Robinson) என்பவரால் ஆங்கிலத்தில் செய்யுள் நடையில் மொழி பெயர்க்கப்பட்ட மரியாதைராமன் கதைகளை உள்ளடக்கிய நூலானது 1873ஆம் ஆண்டிலேயே "Tamil Wisdom"

என்னும் பெயரில் இலண்டனிலிருந்து வெளிவந்துள்ளது. இந்நூல் "Tales and Poems of South India" எனும் தலைப்பில் 1885இல் விரிவுபெற்ற நூலாகவும் வெளிவந்துள்ளது. "Tamil Wisdom" நூலானது 1957இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாராலும், "Tales and Poems of South India" நூலானது 2000இல் தஞ்சை சேக்கிழார் அடிப்பொடி திரு தி. ந. இராமச்சந்திரனாராலும் தமிழகத்தில் மறுவெளியீடுகளாக வெளியிடப் பட்டுள்ளன.

1873ஆம் ஆண்டிலேயே, செய்யுள் நடையிலே, அயல் நிலத்திலிருந்து, அயல்மொழியினரால் மரியாதைராமன் கதைகள் மொழிபெயர்க்கப்பெற்று நூலாக மலர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

"Tales and Poems of South India" நூல், "கதா மஞ்சரி" எனும் நூலில் மரியாதைராமன் கதைகள் இடம் பெற்றுள்ளமையையும், அதில் முதற்கதை வழக்கமான மரியாதைராமன் கதைகளில் உள்ளதிலிருந்து சற்றே மாறு பட்டு அமைந்துள்ளமையையும், குறிப்பிடுகிறது (பக். 268, 269). இச்செய்தியிலிருந்து 1873க்கு முன்னர் வெளிவந்த "கதாமஞ்சரி" நூலில் மரியாதைராமன் கதைகள் இடம் பெற்றமையை அறியமுடிகிறது.

எட்வர்ட் ஜ்விட் இராபின்சன், மரியாதைராமன் கதை களுள் இருபதாவது கதையாக இடம்பெறுவது, மொழி பெயர்க்க ஏற்றதாக இல்லை எனவும், அதனால் அக் கதையை மட்டும் மொழிபெயர்க்கவில்லை எனவும் குறிப்பிடு கின்றார் (ப. 305).

ஆங்கிலத்தில் உரை நடை வடிவிலான மொழிபெயர்ப்பை பி. இராமச்சந்திரராவ் என்பார் ஆக்கியுள்ளார். இம்மொழி பெயர்ப்பு நூலில் வெளியிடப்பெற்ற ஆண்டு குறிப்பிடப்பட வில்லை. எனினும் இம்மொழிபெயர்ப்பு பழைமையானதென் பதை நூலால் உணரமுடிகின்றது

## இந்நூலகப் பதிப்புக்கு அடிப்படையான சுவடி :

இப்பதிப்பிற்கு அடிப்படையாய் அமைந்த சுவடி, சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள 1830 ஆம் எண் சுவடியாகும். இச்சுவடியில் 38 ஏடுகளில் நூல் எழுதப்பெற்றுள்ளது. மரியாதைராமன் கதைகள், இரண்டாவது கதையிலிருந்துதான் 'குருவாழ்க குருவே துணை' எனும் தொடக்கக் குறிப்புடன் தொடங்குகின்றன. சுவடியில் மரியாதைராமன் கதைகளுடன் இராயர் அப்பாஜி கதைகளும் இடம்பெற்றுள்ளன. அதனை அடுத்துத் தெனாலிராமன் கதைகளின் தொடக்கம் மட்டும் எழுதப் பெற்று, அதன்பின் ஏடு தொடர்ந்து எழுதப்பெறாமல் இடையிலேயே நிறுத்தப்பட்டுள்ளது. இங்கு, அச் சுவடியில் இடம்பெற்றுள்ள 'மரியாதைராமன் கதைகள்' மட்டும் நூலாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

இச்சுவடி சரசுவதி மகாலுக்குத் தாளியாப்பட்டி திரு வை. பாலார் கவுண்டர் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப் பெற்றதாகும். அவருக்கு நூலகத்தின் நன்றி உரியது.

## இப்பதிப்பின் அமைப்பு :

இப்பதிப்புக்கு அடிப்படையான சுவடியில், வழக்கமாக மரியாதைராமன் கதைகளில் இடம்பெறும் முதற்கதையும்

இறுதிக்கதையும் காணப்பெறவில்லை. ஆதலால் இவ்விரு கதைகள் மட்டும், பழம்பதிப்பு நூலான "கதாசிந்தாமணி யென்றுவழங்கிய மரியாதைராமன் கதை" எனும் நூலி லிருந்து (1904) இப்பதிப்பு நூலில் எடுத்தளிக்கப் பெற்றுள்ளது.

கதைகளுள் இடம்பெற்றுள்ள பழமொழிகள் தடித்த எழுத்தில், கவனத்தில் நன்கு படும் வண்ணம் அச்சிடச் செய்யப்பெற்றுள்ளன.

நூலின் முற்பகுதியில் விரிவான இப்பதிப்புரையும் பொருளடக்கமும் இடம்பெறுகின்றன. பிற்பகுதியில் அருஞ்சொல் அகரநிரல், பழமொழி அகரநிரல், அரிய பிற் சேர்க்கைகள் ஆகியன இடம்பெற்றுப் பதிப்புக்கு வளம் சேர்க்கின்றன.

## நமது பதிப்புக்கும் பிற பதிப்புகளுக்கும் உரிய மூலம் குறித்து :

மரியாதைராமன் கதைகள் இதுவரை ஐம்பதுக்கும் மேற் பட்ட பதிப்புகளைப் பெற்றிருக்கும் எனக் கருதலாம். 1873க்கு முன்னரே கதாமஞ்சரி எனும் நூலிலும், வேறு சில நூல்களிலும் இக்கதைகள் இடம்பெற்று அச்சுவடிவில் வெளி வந்தமையை அறியமுடிகிறது. 1904இல் மணிமங்கலம் வடிவேலு முதலியாரால் பரிசோதிக்கப்பெற்ற 'கதாசிந்தா மணி' எனும் நூலிலும் இக்கதைகள் இடம்பெற்றுள்ளன.

இக்கதைகள் வாய்மொழி மூலத்திலிருந்து தொகுக்கப் பெற்றனவா சுவடிகளிலிருந்து எடுத்துப் பதிப்பிக்கப் பெற்றனவா என்பதை அறிய இயலவில்லை.

நமது பதிப்பு, சுவடி அடிப்படையில் அமைந்ததாகும். மரியாதைராமன் கதைகளுக்குச் சுவடி அடிப்படையில் வேறு பதிப்புகள் எதுவும் தோன்றியதாகத் தெரியவில்லை. கதா சிந்தாமணி எனும் நூலுள் இடம்பெற்ற கதைகளுக்கும் நமது பதிப்பிலுள்ள கதைகளுக்கும் நடையமைதியில் பல ஒற்றுமைகள் உள. இரண்டும் ஒரு மூலத்திலிருந்து உருவாகியிருக்கலாம்.

'மரியாதைராமன் கதைகள்' எனும் பெயரில் இன்று பல வெளியீட்டாளர்களாலும் நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. அவை பழம்பதிப்பு நூல்களின் அடிப்படையில், அவ்வந் நூல்களின் பதிப்பாசிரியர்களால் அவரவர் நோக்குக்கும் போக்குக்கும் ஏற்பச் சிறுசிறு மாறுதல்களுடன் தம்தம் நடையில் எழுதப்பெற்றவையாக உள்ளன.

இப்பதிப்புகளில், பதிப்பாசிரியர், தொகுப்பு (தொகுப் பாசிரியர்), பார்வையிட்டவர், ஆசிரியர், எழுதியவர், என்று குறிப்பிடப்பட்டுப் பெயர் குறிக்கப்பெற்றும், எதுவும் குறிப்பிடப்பெறாமல் பெயர்மட்டும் குறிக்கப்பெற்றும் பதிப்பித்தோர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இப்பதிப்பு களின் ஆசிரியர்களில் பலர் தங்கள் முன்னுரைகளில். கதை களை இக்கால நடைமுறைகளுக்கேற்பவும், கொச்சையான சில பகுதிகளை நீக்கிவிட்டும், தம் நடையிலும் எழுதியுள்ள தாகக் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டுப்புறவியல் அறிஞரான திரு சு. சக்திவேல் தயாரித்துள்ள நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் பெயர் களைக் கொண்ட அகரவரிசைப்பட்டியலில் 'மரியாதைராமன் கதை'யும் இடம்பெற்றுள்ளது. (நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்(Folk Ballads), **நாட்டுப்புறவியல்** பக். 215—230).

ஆனால் மரியாதைராமன் கதைகள் செய்யுள் வடிவில்—கதைப்பாடல் வடிவில் இருப்பதாகத் தெரியவில்லை.

## மரியாதைராமன் கதைப்பதிப்புகள்—சில வேறுபாடுகள் :

மரியாதைராமன் கதைகளின் எல்லாப் பதிப்புகளும் ஒரே மாதிரியான கதை வரிசையொழுங்கைக் கைக்கொள்ள வில்லை. சில பதிப்புகளில் வரிசையொழுங்கு ஒத்தும் சில பதிப்புகளில் வரிசையொழுங்கு மாறியும் உள்ளது.

நமது பதிப்பில் கதைகளுக்கான தலைப்புகள், ‘தன் குழந்தையைக் கொன்று சக்களத்திமேல் பழிபோட்டது.’ ‘......வழக்கு நேரிட்டது’, ‘......முத்தை இல்லை என்றது’, ‘......எலி தின்றது’ என்பன போல அமைந் துள்ளன. அசோக்குமாரால் உருவாக்கப்பெற்றுத் தன லட்சுமி பதிப்பகத்தால் 1990இல் வெளியிடப்பட்ட நூலில் உள்ள கதைத்தலைப்புகள் பொருத்தமான ‘உலகநீதி’ இலக் கியத் தொடர்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது சுவடிப் பதிப்புக் கதைகளில் பாத்திரங்களுக்குப் பெயர்கள் காணப்பெறவில்லை. சில பதிப்புகளில் பதிப்பா சிரியர்களே பாத்திரங்களுக்குத் தத்தம் நோக்கில் பெயர்கள் இட்டிருக்கின்றனர். நமது சுவடிப்பதிப்பில் பாத்திரங் களுக்குச் சுட்டப்படும் சில சாதிப்பெயர்கள் வேறு சில பதிப் புகளில் மாறிக் காணப்படுகின்றன.

பழமொழிகளே இடம்பெறாமல் கதைகள் அமைந்துள்ள நிலையையும் சில பதிப்புகளில் காணமுடிகின்றது.

சில பதிப்பு நூல்களில் புதிதாகச் சில கதைகள் இடம் பெற்றுள்ளன. அவை வெவ்வேறு நூல்களில் உள்ள பரவல் பெற்ற வாய்மொழிக் கதைகளாகும்.

"யானைக்கும் பானைக்கும் சரி" என்னும் கதையின் பாத்திரங்களில் உள்ள இந்து, முசுலீம் என்னும் மதச் சுட்டுப் பெயர்கள், சிவகுமார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள 'மரியாதைராமன் கதைகள்' பதிப்பில் காணப்பெறவில்லை. இம்மதச் சுட்டுப்பெயர்கள் நமது பதிப்பிலும் பிற பதிப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.

### மரியாதைராமன் கதைகளில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் :

மரியாதைராமன் கதைகள் ஒவ்வொன்றும் தம் முடிவுப் பகுதியில் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டு முடிவனவாக அமைந்துள்ளன. 2, 3, 5ஆம் கதைகளில் மட்டும் இரண்டு இரண்டு பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகளில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் இப்பதிப்பு நூலின் இறுதியில் அடைவுபடுத்தி அளிக்கப்பெற்றுள்ளன (ப. 55, 56).

### மரியாதைராமன் கதைப்பதிப்புகள்— குறிப்பிடத்தக்க வேறுபாட்டுப் பகுதிகள் :

நமது நூலகப்பதிப்பில் இடம்பெற்றுள்ள கதைப்பகுதிகளும் பிற பதிப்புகளில் இடம்பெற்றுள்ள கதைப்பகுதிகளும் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவை சமூகவியல் நோக்கில் எண்ணிப்பார்க்கத்தக்கவை.

எடுத்துக்காட்டாக ஒரு பகுதியைக் காணலாம்.

மரியாதைராமன் நீதிபதியானதும், அவனுடைய தந்தை அவனை அப்பதவியை விட்டுவிடச் சொல்கின்றார். அதற்கு அவன் மறுமொழி கூறுகின்றான்.

இப்பகுதி நமது சுவடிப்பதிப்பு நூலிலிருந்து :

> தன் குமாரனுக்கு மரியாதைராமனென்கிற பேரும் நியாயாதிபதி உத்தியோகமும் கிடைத்த சமாசாரத்தை அவன் தகப்பன் கேள்விப்பட்டு அவனிடத்திற்கு வந்து "ஓகோ பிள்ளாய்! என்ன காரியம் செய்தாய்? இப்படி மதிமோசம் போகலாமா? நியாயசூச்சம் அறிகிறது, தேவர்களுக்கும் எளிதல்லவே. சற்றே பிசகினால் அதிக பாவம் விளையுமே! நீ இந்த நியாயாதிபதியத்தை விட்டு விடு" என்று சொன்னான். அதைக்கேட்டு மரியாதைராமன், "ஓய் என் பிதாவே! கோபம் செய்யவேண்டாம். கடவுளானவர் எப்படிப்பட்ட நியாய சூட்சுமத்தையும் கண்டுபிடிக்கத்தக்க புத்தியைக் கொடுத்து அதிலே எவ்வளவும் குற்றம் வராமல் என்னைக் காப்பாற்றுவார். தானாகவந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவது போல் உலகத்தை எல்லாம் ஆளும் அரசனாலே கிடைத்த இந்த நியாயாதிபதித்தானத்தை விட்டுவிடச் சொல்லாதிருக்கும்படி, உம்மைப் பிரார்த்திக்கிறேன்" என்றான். (ப. 4 )

இதே, மரியாதைராமனின் தந்தை அறிவுரை கூறும், மரியாதைராமன் மறுமொழி கூறும் கதைப்பகுதி பிரேமா பிரசுரப் பதிப்பு நூலிலிருந்து:—

(இப்பதிப்பு முதற்பதிப்பாக 1958இலும் எட்டாம் பதிப்பாக 1989இலும் வெளிவந்துள்ளது.)

மரியாதைராமனின் தகப்பனார் தன் குமாரனுக்கு நீதிபதி ஸ்தானம் கிடைத்ததைக் கேள்விப்பட்டு அளவிலாத ஆனந்தம் கொள்வதற்குப்பதிலாக அளவிலாத துக்கம் கொண்டவராய்த் தம்குமாரனிடம் வந்து, "மகனே! நம்முடைய குலத்தொழிலான விவசாயத்தை விட்டுவிட்டு ஏன் இந்த அபாயகரமான நீதிபதியின் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டாய்? நீதி நுட்பங்களை அறிந்து சரியான தீர்ப்பு வழங்குவது தேவர்களுக்கும் எளிதான காரியமல்ல. தராசின் தட்டு இறங்காமல் நீதி வழங்கவேண்டும். சிறிது தவறினாலும் நிரபராதிகளின் கண்ணீர் நம்முடைய ஏழேழு தலைமுறையையும் கூர்மையான வாள் போல் அறுக்குமே! பழிபாவமும் வந்து சேருமே! நமக்கு எதற்கப்பா இந்த வம்பெல்லாம்? அபாயகரமான அந்தப் பதவியை விட்டுவிடு!" என்றார்.

அதற்கு மரியாதைராமன், "தந்தையே! கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒருவன் தன் குலத்தொழிலைத் தான் செய்யவேண்டுமென்று சொல்வது அறிவுடைமையாகாது. பிறப்பை ஒட்டித் தொழிலை வகுப்பதும், சாதாரண குடும்பங்களில் உயர்ந்த அறிவுடையோர் பிறக்கமாட்டார் என்றும் மூட நம்பிக்கையும் வெகு காலமாகவே நம் நாட்டைப் பிடித்துப் பெரும்வியாதியாக வளர்ந்து வந்திருக்கிறது. அந்தச் சம்பிரதாயத்தை உடைத்தெறிவதற்காக நான் இப்போது நீதிபதியாக ஆகியிருக்கிறேன்!. நீதிதேவனான கடவுள் எப்படிப்பட்ட நீதி நுட்பத்தையும் கண்டுபிடிக்கத்தக்க அறிவையும் ஆற்றலையும் எனக்குக் கொடுத்து நீதி வழங்கும் முறையிலே எள்ளளவும் குற்றம் வராமல் என்னைக்

காப்பாற்றுவார். தானாக வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவதுபோல நாடாளும் மன்னனால் கிடைத்த இந்த நீதிபதி ஸ்தானத்தை வீணாக விட்டுவிடும்படி தயவுசெய்து சொல்லாதீர்கள்'' என்று பிடிவாதமாக மறுத்துவிட்டான்!

இந்த இரண்டு பகுதிகளையும் உற்றுநோக்கும் போது அவற்றின் தொனியை, வெளிப்படுத்தும் கருத்துகளை அடையாளங் காணமுடிகின்றது, முக்கியமான வேறுபாடு புலப்படுகின்றது.

குலத்தொழில் செய்யும் மரபைப் போற்றும் பழமை வாதியாக மரியாதைராமனின் தந்தை பேசுவதையும், திராவிட இயக்க—பகுத்தறிவுச் சிந்தனைகளைக்கொண்ட ஓர் இளைஞன் பேசுவது போல மரியாதைராமன் பேசுவதையும் இரண்டாவதாக இடம்பெற்றுள்ள கதைப்பகுதியில் நாம் காண்கின்றோம்.

பிரேமா பிரசுரப் பதிப்புக் காலத்திற்கு முன்பு சுவடியில் எழுதப்பட்டதான நமது பதிப்பில் தந்தை மகன் உரையாட லில் குலத்தொழில் போன்ற எந்தக் கருத்தும் இடம்பெற வில்லை. பழைய சுவடியில், தந்தை சாதியைக் காரணங் காட்டி நம் சாதிக்கு ஏற்காது என்று மரியாதைராமனைப் பதவியைவிட்டு விலகச்சொல்லவில்லை. மரியாதைராமனும் புரட்சி இளைஞனாக விடைதரவில்லை. தன் காலத்தின் கருத்தோட்டத்தைத் தனக்கு முந்தைய காலத்துப் படைப் பான-பாத்திரமான மரியாதைராமனை வாய்ப்பாகக்கொண்டு அவன் கூற்றாக ஆக்கிப் பதிப்பித்துள்ளார் பிரேமா பிரசுரப் பதிப்பாசிரியரான அரு. இராமநாதன். (பிற சில பதிப் பாசிரியரும் இவரைப் பின்பற்றியுள்ளனர்).

அவர் சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்க வில்லை என்பதையும் அவரே அடிப்படைக் கதையைத் தன் மனப்போக்கிற்கு இயையக்கொண்டுசென்றுள்ளார் என்பதை யும் அப்பதிப்பின் 'புதிய தமிழில் புதிய கதைகளுடன்' என்னும் வரி சுட்டி நிற்கின்றது.

## கால மாற்றத்தால்—சமூகப் பழக்கவழக்க மாற்றத்தால் கதையில் ஏற்பட்டுள்ள மாறுதல்

ஆண்கள் காதுகுத்திக்கொண்டு காதில் கடுக்கன் அணிந்துகொள்ளும் வழக்கம் கடந்த நூற்றாண்டு வரை நம்நாட்டில் இருந்துவந்தது. இப்போது இவ்வழக்கம் 'சென்று தேய்ந்து இற்று'விட்டது.

நமது மரியாதைராமன் கதைப்பதிப்பு நூலிலும் பிற பழம்பதிப்பு நூல்களிலும் உள்ள 'ஒருவன் காதுக்கடுக்கனை ஒருவன் திருடியது' என்னும் கதை ஆண்கள் காதுக்கடுக்கன் அணியும் வழக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இனனொரு வகையில் சொல்லப்போனால் ஆண்கள் காது களில் கடுக்கன் அணியும் வழக்கம் நிலவிய காலக்கட்டத்தில் இக்கதை தோன்றியிருக்கின்றது எனலாம்.

தற்காலத்தில் ஆண்கள் காதுகளில் கடுக்கன் அணியும் வழக்கம் வழக்கற்றுவிட்டது. இதனை மனத்தில்கொண்டு, அண்மையில் வெளிவந்த 'மானோஸ்' என்பவரை ஆசிரிய ராகக்கொண்ட "மரியாதைராமன் நீதிக் கதைகள்" நூலில் மேலே குறிப்பிட்ட கதை, 'பொன் ஜிமிக்கிக்குக் கால் வந்தது' என்னும் கதையாக உருமாறி இடம்பெற்றுள்ளது. பழைய கதையில் இடம்பெறும் இரு ஆண் பாத்திரங்களும் இதில் பெண் பாத்திரங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

கடுக்கன் ஜிமிக்கியாக உருமாறியுள்ளது. நூலைப்படிக்கும் தற்கால வாசகர்களுக்குக் கதை தற்காலத்தில் நடந்தது என்று தோன்றும்படி இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

காலமாற்றத்தால் -சமூகப் பழக்கவழக்க மாற்றத்தால் ஒரே கதை பேரளவு மாறுதல்களைப் பெற்றுள்ளமையை இப்பதிப்பு நூலின் கதை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

**நிறைவுரை :**

மரியாதைராமன் கதைகளின் நடை நமது இப்பதிப்பில் பேச்சுவழக்குச் சொற்களையே பெரிதும் கொண்டு அமைந்துள்ளது. மரியாதைராமன் கதைகள் ஓரளவு எழுத்தறிவுள்ளவர் முதல் நன்கு கற்றவர் வரை, சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரையும் ஈர்க்கும் பாங்குடையன. இக்கதைகள் சில ஆண்டுகளுக்கு முன் தொலைக்காட்சி ஊடகத்தின் வழியாகவும் மக்களிடம் சென்று சேர்ந்து வரவேற்புப் பெற்றதை அனைவரும் அறிவர்.

பரவலான வரவேற்புக்குரிய இக்கதைகள், கதையிலக்கிய—நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களால் மேலும் ஆராய்தற்குரிய களமாக விளங்குகின்றன. அவ்வாய்வுகளைத் தூண்டும் வகையிலும் துணையாகவும் இப்பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது

இவ்விரண்டாம் பதிப்பின் நிறைபோற்றிக் குறை பொறுத்துத் தமிழுலகம் வரவேற்கும் என்பது இப்பதிப்பாசிரியனின் நம்பிக்கை.

தஞ்சாவூர்,
25—5—2001.

**ய. மணிகண்டன்,**
தமிழ்ப்பண்டிதர்.

# மரியாதைராமன் கதைகள்

## 1. திருடர்கள் நால்வரில் ஒருவன் மற்றவரை மோசஞ்செய்தது *

நான்குபேர் திருடர் ஒரு பட்டணத்தில் ஒரு கிழவியின் வீட்டிலிறங்கித் தாங்கள் திருடிப் பொதுவில் வைத்திருந்த உடைமைகளையும் பணங்களையும் ஒரு தலையிலே போட்டு மேலே முத்திரையிட்டு, "நாங்கள் நாலுபேருமாக வந்து கேட்கும்போது இதைக்கொடு. அதுவரைக்கும் பத்திரமாகப் புதைத்துவை" என்று கொடுத்துச் சிலநாள் அவள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அந்த நாலுபேரும் எதிர்வீட்டுத் திண்ணையில் பேசிக்கொண்டிருக்கையில் மோர் வாங்குதற்கு அந்தக் கிழவி வீட்டிலே போய்த் தோண்டியெடுத்துக் கொண்டு வாவென்று தங்களுள் ஒருவனையனுப்பினார்கள். அவன்

---

* இம் முதற்கதை சரசுவதி மகால் நூலக 'மரியாதைராமன் கதைகள்' சுவடியில் இடம்பெறவில்லை. இக்கதையே பதிப்புகள் அனைத்திலும் முதற்கதையாக இடம்பெறுகின்றமையைக் கருதி, "கதாசிந்தாமணி யென்று வழங்கிய மரியாதைராமன் கதை" எனும் பழம்பதிப்பு நூலிலிருந்து (1904) இக்கதை இவண் எடுத்து அளிக்கப்பெறுகின்றது.

மரி-

போய்த் தோண்டி எடுத்துக்கொண்டு வரச்சொன்னாரென்று சொன்னான்.

அதற்கவள் புதைத்துவைத்திருக்கிற தவலையைத் தோண்டி எடுத்துவரச் சொன்னதாக நினைத்துக்கொண்டு தெருவில் வந்து அவனைத் தோண்டியெடுத்துவரச் சொன்னீராவென்று கேட்க அவர்களாமென்று சொல்லுதலால் உள்ளேபோய்க் கட்டப்பாரையைக் கொடுத்துச் சுகமாகத் தோண்டி எடுத்துக்கொண்டு போவென்று சொன்னாள்.

அவன் அதிக சந்தோஷத்துடனே சீக்கிரத்திலே தோண்டித் தவலையை எடுத்துக்கொண்டு புழக்கடை வழியே ஓட்டம்பிடித்தான். மற்ற மூன்றுபேரும் ஒரு நாழிகை வரைக்கும் பார்த்து அவனைக் காணாமையாலே உள்ளே போய் நடந்த மோசத்தையறிந்து கிழவியின்மேலே சோழ ராசனிடத்திலிருந்த நியாயாதிபதியிடத்திலே பிரியாது செய்தார். அவன் கிழவியை அழைப்பித்து விசாரணை செய்து அவ்வுடமையைக் கிழவி கொடுக்கும்படியாகத் தீர்ப்புச்செய்தான். அந்தக்கிழவி "நான் என்னசெய்வேன் தெய்வமே!" என்று அழுதுகொண்டு வருகையில் நடுவழியிலே சிறுபிள்ளைகளுடன் கெச்சக்காயாடிக்கொண்டிருந்த மிகுந்த புத்திசாலியான ராமன், "ஏன் பாட்டி அழுகிறாய்" என்றான். அதற்கு அவள் நடந்த சங்கதியை எல்லாஞ் சொன்னாள். அதைக்கேட்டு, "இந்த அனியாயத் தீர்ப்பைச் செய்பவன் வாயிலே மண் விழுந்தது போலே இதுகள் குழியிலே விழக்கடவது" என்று, தன் கையிலிருந்த கெச்சைக் காய்களை விட்டெறிந்தான்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த சிலர்போய் அரசனுடனே சொல்ல அரசனானவன், அந்த ராமனை அழைப்

பித்து, "நியாயாதிபதி செய்த தீர்ப்பை அநியாயத் தீர்ப்பென்று சொன்னாயே. நீ நியாயமாகத் தீர்ப்புச் செய்" என்று சொன்னான்.

உடனே அந்த ராமன் உடமைக்காரரையும் கிழவியையும் அழைப்பித்து விசாரணை செய்து உடமைக்காரரைப் பார்த்து, "உங்கள் வாக்குமூலப்படியே நீங்கள் மூன்றுபேர் மாத்திரம் கேட்டால் கொடுக்கக்கூடாது. நாலு பேரும் வந்து கேட்டால் அப்போது உங்கள் பொருளைக் கொடுப்பாள்" என்று கிழவிபட்சம் தீர்ப்புச் செய்தான்.

**பொருள் போனவழியே துக்கம்போம்** என்கிறபடியே கிழவிக்கு உண்டாகிய துக்கம் போய்விட்டது. அதுகேட்டு இராசா சந்தோஷித்து அவனுக்கு **மரியாதைராமன்** என்று பெயரிட்டு நியாயாதிபதியாய் ஏற்படுத்திச் சகல வெகுமானமுஞ்செய்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டான்.

## 2. தன் குழந்தையைக் கொன்று சக்களத்தி மேல் பழி போட்டது

தன் குமாரனுக்கு மரியாதைராமனென்கிற பேரும் நியாயாதிபதி உத்தியோகமும் கிடைத்த சமாசாரத்தை அவன் தகப்பன் கேள்விப்பட்டு அவனிடத்திற்கு வந்து "ஓகோ பிள்ளாய் என்ன காரியம் செய்தாய். இப்படி மதி மோசம் போகலாமா? நியாய சூக்ஷம் அறிகிறது தேவர்களுக்கும் எளிதல்லவே. சற்றே பிசகினால் அதிக பாவம் விளையுமே. நீ இந்த நியாயாதிபதியத்தை விட்டு விடு" என்று சொன்னான்.

அதைக்கேட்டு மரியாதைராமன், "ஓய் என் பிதாவே! கோபம் செய்ய வேண்டாம். கடவுளானவர் எப்படிப்பட்ட நியாய சூட்சமத்தையும் கண்டுபிடிக்கத்தக்க புத்தியைக் கொடுத்து அதிலே எவ்வளவும் குற்றம் வராமல் என்னைக் காப்பாற்றுவார். தானாக வந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவது போல், உலகத்தை எல்லாம் ஆளும் அரசனாலே கிடைத்த இந்த நியாயாதிபதித் (ஸ்) தானத்தை விட்டுவிடச் சொல்லாதிருக்கும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

இந்தச் சொற்களைக் கேட்டு மறுத்துச் சொல்லுதற்கு இடமில்லாமல் "உன்னிஷ்டப்படி செய்"யென்று சொல்லி விட்டுப் போயினபின்பு 'நான் இனி இவனுடன் சகவாசம் செய்வேனேயானால் இவனுக்கு வருகிற குற்றத்துக்கும் பழிக்கும் ஆளாக வேண்டும். ஆகையால் தேசாந்திரம் போகிறதே உத்தமம்" என்று நினைத்துக்கொண்டு தன் மகனுடனே சொல்லாமல் பிரயாணம் செய்துகொண்டு

போகிறபோது, அன்று இராத்திரி ஒரு ஊரிலே ஒரு இராத்திரி ஒரு வீட்டிலே இறங்கினான்.

அந்த வீட்டுக்காரன் அன்றைக்கு வெளியிலே போயிருந்தான். அவன் மனைவிமார்கள் இரண்டுபேர் மாத்திரம் இருந்தார்கள், மூத்தவள் நித்திரைபோய் விட்டாள். தலைக்கடைத் திண்ணையில் படுத்திருந்த மரியாதைராமன் தகப்பன் தன்பிள்ளைக்குச் சம்புவித்த தைக் குறித்துத் தூக்கம் பிடியாமல் எண்ணமிட்டுக் கொண்டு இருந்தான்.

ஆனால் பாதி இராத்திரியிலே அவனையுந் தன் சக்களத்தியையும் தூங்கிவிட்டாரென்று நினைத்து இளைய வள் இதுவே நல்ல தருணமென்று தன் சோர நாயகனை உள்ளே அழைத்துக்கொண்டு போய்ச் சரசத்துடனே இருக்கிற சமயத்திலே அதற்கு விரோதமாகத் தன் குழந்தை முழித்துக்கொண்டு வீரிட்டு அழுத வாக்கியத்தைக் கண்டு கழுத்தைப் பிசக்கிக் கொன்று, அதை மூத்தவள் பக்கத்திலே கிடத்திவிட்டுத் தன் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு விடிய(ற்)காலத்திலே கள்ளப் புருசனை அனுப்பிவிட்டு ஊரெல்லாம் அறியும்படியாகத் தன்னையைச் (தன் பிள்ளையை) சக்களத்தி பொறாமையினாலே கொன்றா ளென்று பழிபோட்டுக் கூவியழுதுகொண்டு மரியாதை ராமனிடத்திலே பிராது செய்யப் போனாள்.

இதுகளையெல்லாம் தப்பாமல் பார்த்துக்கொண்டிருந்த மரியாதைராமன் தகப்பன் தனக்குள்ளே ஆச்சரியப்பட்டு "நல்லது. இந்த வழக்கைக் குறித்து என்மகன் சரியாகத் தீர்ப்புச் செய்வானேயாகில் மற்ற வழக்குகளிலும் பிசகமாட்

டானென்று நம்புவேன்" என்று மறுவேசங் கொண்டு நியாயஸ்தலத்துக்குச் சமீபத்தில் வந்திருந்தான்.

மரியாதைராமன் அந்த விபச்சாரி செய்த பிராதைக் கேட்டுச் சேவகரைக்கேட்டு மூத்தவளை அழைப்பித்து, 'நீயேன் இப்படிப்பட்ட சிசுஹத்தி செய்தாய்?" என்று கேட்டான். "இறைவனே! நரகத்துக்கு ஆளாகத்தக்க இந்த மகாபாதகத்தைக் கடவுளறிய நான் செய்ததில்லை" என்றாள்.

அந்தச் சொல்லைக் கேட்ட மாத்திரத்திலே இளைய வளோ, "ஓய் நியாயாதிபதியே! இவள் மிகவும் மோசக்காரி, கொலைசெய்தாளென்பதில் நீர் எவ்வளவும் சந்தேகப்படா தேயும்" என்றாள். இவ்விருவர் சொல்லையுங் கேட்டுச் சந்தேகப்பட்டு "இதற்குச் சாட்சி உண்டா?" என்று கேட்டான். அதற்கு இளையவள், "என் கண்களேயல் லாமல் வேறே சாட்சியில்லை" என்றாள்.

நியாயாதிபதி தேவதைக்குத் தியானித்துக்கொண்டு உண்மையை வெளிப்படுத்தத் தக்க ஒரு யோசனை தனக் குள்ளே செய்து அவ்விரண்டு பெண்டுகளையும் பார்த்து, "உங்களுக்கு வேறு சாட்சியில்லாமையால் புடவையை அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக இந்த மகாசபையை மூன்று சுற்று வந்து சத்தியம் செயிங்கோள்" என்றான்.

இந்தச் சொல்லைக் கேட்ட மாத்திரத்திலே சின்னவள் அப்படியே செய்யத் துணிந்தாள். பெரியவளோவென்றால் "என் உயிர் போனாலும் போகட்டும். இப்படிப்பட்ட மானக்கேடான காரியத்துக்கு உட்படமாட்டேன்" என்று

தனக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு, "ஓய்! நியாயாதிபதியே! அந்தக் குழந்தையைக் கொன்றவள் நானே! என்னை அதற்குத் தகுதியான தெண்டினை செய்யாமல் இப்படிப்பட்ட மானபங்கம் செய்யாதே!" என்றாள்.

நியாயாதிபதி, இவ்விருவர் சொல்லையுங் கண்டு "இளையவள் முழுமோசக்காரி" என்றறிந்து, சில அடிகள் அவளை அடித்து அவள் வாயைக்கொண்டே நிஜத்தை வெளிப்படுத்தி அவளைத் தூக்கில் போட உத்தரவு கொடுத்தான். இளையவளுக்குத் **தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்** என்கிற பழமொழிப்படி நேரிட்டது.

இதுகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மரியாதைராமன் தகப்பன் அளவற்ற சந்தோஷத்தை அடைந்து புத்திரனிடத்துக்குப்போய், "மரியாதைராமன் என்கிற பேரும் இந்தத் தொழிலும் உனக்கொக்கும்; இப்படிப்பட்ட புத்தி யுஷ்த்திகளை உனக்குக் கொடுத்த கடவுளுக்கு நான் வந்தனம் செய்கிறேன். நீ தீர்க்காயுசு உள்ளவனாகச் சுகத்தோடே வாழ்!" என்று ஆசீர்வாதஞ் செய்து தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

## 3. பஞ்சு வர்த்தகருக்கு ஒரு பூனையால் வழக்கு நேரிட்டது.

நாலுபேர் பங்காக, பஞ்சு வர்த்தகம் பண்ணினார்கள். பஞ்சு மூட்டைகளை எலி கடிக்காமலிருக்கும் பொருட்டுக்காக ஒரு பூனையை வளர்த்தார்கள்.

வளர்க்கும்போது அதனுடைய நாலுகாலுகளையும் ஆளுக்கு ஒருகாலாகப் பங்குவைத்துக்கொண்டு, அவனவன் தன்தன் பங்காகிய காலுக்குத் தண்டை கொலுசு சலங்கை முதலானதுகளால் அலங்கரித்துச் சிறப்பாக வைத்திருந்தார்கள்.

அப்படியிருக்கையில் அந்தப் பூனைக்கு ஒருகாலிலே காயம்பட்டது. அந்தக்காலுக்குச் சுபத்திரகாரன் எண்ணெய்ச் சீலை சுற்றிவைத்தான். அது அடுப்பண்டையிலே போனபோது அடுப்புத் தீ எண்ணெய்ச் சீலையிலே பற்றிக் கொண்டது.

அது உடனே அந்தப் பூனையானது பஞ்சுமூட்டைகளின் மேலே விழுந்து ஓடிப்போகையால் அம்மூட்டைகள் பற்றிக்கொண்டு வெந்துபோய்விட்டதுகள், அதைக்கண்டு எண்ணெய்ச்சீலை சுற்றின கூட்டாளி கையில் மற்ற மூன்று பேரும் தங்களுக்கு வந்த நஷ்டத்தை வாங்கிக் கொடுக்கும் படியாக மரியாதைராமனிடத்தில் பிராது அருளிக் கொடுத்தார்கள்.

அந்த நியாயாதிபதி பிரதிவாதியை அழைப்பித்து விசாரணை செய்து அவன் மனமறிந்து செய்ததல்லாமையி

னாலே, வாதிகளே செய்த பிராது அநியாயமென்றறிந்து அந்த வாதிகளைப்பார்த்து, "பிரதிவாதி பூனைக்கு எண்ணெய்ச் சீலை சுற்றிவைத்த கால் காயமுள்ளதாயிருக்கிறபடியால் நடக்கிறதற்கு உதவாதே! காயமில்லாத உங்கள் மூன்றுபேர்களுடைய கால்களினாலே நடந்து போகையில் இப்படிப்பட்ட சேதம் வந்தது. ஆகையால், நீங்கள் மூன்று பேரும் பிரதிவாதியினுடைய நஷ்டத்தைக் கொடுக்க வேணும்" என்று தீர்ப்புச் செய்தான்.

வாதிகள் மூன்றுபேரும் **யானை தன் தலையிலே தானே மண்போட்டுக் கொள்கிறது போல்** தங்களுக்குத் தாங்களே முன்வந்ததோடு பின்னும் நஷ்டம் தேடிக்கொண்டார்கள். **திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை** என்கிற பழமொழிப்படி அதிக விசனத்தை அடைந்த பிரதிவாதி தெய்வ சகாயத்தினாலே தன் பச்சம் தீர்ப்பானதைக் கண்டு அதிக சந்தோஷத்தை அடைந்தான்.

## 4. ஒருவன் தன்னிடத்தில் வைத்த முத்தை இல்லை என்றது

ஒருவன் விலையுயர்ந்த இரண்டு முத்துகளைச் சம்பாதித்துத் தன்னிடத்திலே விசுவாசம் உள்ளவனைப் போலிருந்த மற்றொருவன் கையிலே கொடுத்து, "இதுகளை நான் வருமளவும் காப்பாற்றி வை" என்று சொல்லிவிட்டுச் சிலகாலம் சஞ்சாரம் செய்து திரும்பி வந்து அவனை அந்த முத்துக்களைக் கொடுவென்று கேட்டதற்கு அவன் "நான் உன் கையிலே வாங்கினதே இல்லை" என்று சாதித்தான்.

பின்பு கொடுத்தவன் மரியாதைராமனிடத்துக்குப் போய்ப் பிராது பண்ணினான். அப்போது மரியாதை ராமன் அவனை அழைப்பித்து அவன் வாய் விசேஷங்களைக் கேட்டு மோசத்தை முகக்குறிப்பினால் அறிந்து கொண்டு தீர்ப்புக் கொடுக்காமல் அவர்களைப் போகச் சொல்லிச் சிலநாள் பொறுத்து வாதி வாயைக் கண்டு அந்த முத்துக்களின் மாதிரியைத் தெரிந்துகொண்டு பிரதிவாதி கையிலே அந்த மாதிரியாகத் தொண்ணூற்றெட்டு முத்துக்களை ஒரு நைந்த சரட்டிலே கோத்துக்கொடுத்து "இச்சரம் நூறு முத்துகளுள்ளது. சரடு நைந்து இருக்கிறபடியால் வேறொரு சரட்டிலே கோத்துக்கொண்டு வந்தி (வா). யோக்கியனாகக் காணப்படுகிறபடியினாலே உன்னை நம்பிக் கொடுக்கிறேன்" என்று சொல்லிக் கொடுத்து அனுப்பினான்.

அந்த மோசக்காரன், அதுகளைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோய்க் கோத்து எண்ணிப் பார்த்தபோது

இரண்டு முத்துகள் குறை ஆகக் கண்டு அவ்விரண்டையும் தான் போக்கடித்ததாகவே எண்ணிக் கொண்டு திகிலடைந்து தான் அபகரித்து வச்சிருந்த இரண்டு முத்துகளையும் கூடச் சேர்த்துக் கோத்துக் கொண்டு போய்க் கொடுத்துச் சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கிட்டுக் கொண்டது போலத் தந்திருட்டைத் தானே வெளிப்படுத்தினான்.

அப்போது நியாயாதிபதி அவன் திருட்டை அறிந்து இரண்டு முத்துகளையும் உடைமைக்காரருக்குச் சேர்த்து விட்டு அவனுக்கு ஏற்ற தெண்டினையும் செய்தான்.

## 5. ஒருவன் தன்னிடத்தில் வைத்த இரும்பை எலிதின்றது என்றது

ஒருவன் பத்து பாரம் இரும்பு வாங்கி ஒருவனிடத்திலே வைத்து மற்றொரு தேசத்துக்குப் போய்ச் சில வருஷங் கழித்துப் பின்பு வந்து அவனை "இரும்புகொடு" என்று கேட்டான்.

அவன் "உன்னிரும்பை எலி தின்றது" என்று சொன்னான். அந்தச் சொல்லைக்கேட்டு இரும்புக்காரன் மரியாதைராமனிடத்திலே போய்ப் பிராது செய்தான்.

மரியாதைராமன் பிராது செய்தவனுக்கு ஒரு உபாயம் கற்பித்தான். அந்த உபாயத்தின்படியே வாதிதன்னை மோசஞ் செய்தவனுடனே "பகையாளி குடியை உறவாடிக் கெடுக்க வேணும்" என்று நினைத்து அதிக சிநேகஞ் செய்து ஒருநாள் தன் வீட்டிலே பிரயோசனமென்று மோசக்காரன் மகனை அழைத்துக்கொண்டு போய்த் தன் வீட்டில் ஒரு அறைக்குள்ளே ஒளித்துவைத்து மறுநாள் மோசக்காரன் "என் பிள்ளை எங்கே" என்று கேட்டதற்கு "அந்தப் பயலைப் பருந்து எடுத்துக்கொண்டு போய் விட்டது" என்றான்.

அது கேட்டு உடனே பிள்ளைக்காரன் மரியாதை ராமனிடத்துக்குப் போய் "இன்னான் என் பிள்ளையைத் தன் வீட்டுப் பிரயோசனத்திலே சாப்பாட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்த் திரும்பி அனுப்பாமல் ஒளித்து வைத்து இருக்கிறான். அனுப்பென்று கேட்டால் பிறாந்து

எடுத்துக்கொண்டு போச்சுது என்று கூறுறான்'' என்று சொன்னான்.

நியாயாதிபதி பிள்ளைமோசஞ் செய்தவனை அழைப்பித்துப் ''பிள்ளையைப் பறாந்து எடுத்துக்கொண்டு போமா'' என்று கேட்டான். அதற்கு அவன், 'இவனிடத்திலே நான் வைத்திருந்த பத்து பாரம் இரும்பை எலி தின்று விட்டதென்று சொல்லுகிறானே இரும்பை எலி தின்னுமா?'' என்றான்.

மரியாதைராமன் அவ்விருவரையும் பார்த்து, ''நீங்கள் ஒருவரையொருவர் முழுப்பூசணிக் காயைச் சோற்றோடே மறைக்குறது போல மோசஞ் செய்கிறது நியாயத்துக்கு விரோதம்'' என்று கண்டித்துப் பிள்ளைக்காரன் இரும்பைக் கொடுக்கும்படியாகவும் இரும்புக்காரன் பிள்ளையைக் கொடுக்கும்படியாகவும் தீர்ப்புச் செய்தான்.

## 6. ஒருத்தி கடன் வாங்கின நெய்யை வாங்கவில்லை என்றது

ஒரு இடைச்சி இரண்டு பசு வைத்துக்கொண்டு இருந்தாள். அவளுக்கு எதிர் வீட்டுக்காரியாகிய மற்றொரு இடைச்சி இருபது பசுவை வைத்துக்கொண்டு இருந்தாள்.

இருபது பசுக்காரி இரண்டு பசுக்காரி கையில் ஒரு விசை நெய் கடனாக வாங்கிக்கொண்டாள். கொடுத்தவள் கெடுவிற்போய் அதைக் கேட்டதற்கு வாங்கினவள், " நான் உன் கையிலே வாங்கினதில்லை " என்று சாதித்தாள்.

கொடுத்தவள் மரியாதைராமனிடத்திலே போய்ப் பிராது பண்ணிக்கொண்டாள். அவன் பிரதிவாதியை அழைப்பித்து விசாரணை பண்ணும்போது, " எனக்கு இருபது பசுக்கள் இருக்கிறதுகள். என் வாதிக்கு இரண்டு பசுக்கள் இருக்கிறதுகள். என்னிடத்தில் அதிகப்பசுக்கள் இருக்கிறதுகளென்று பொறாமையினாலே நிபம் போடுகிறாள் " என்று சொன்னாள்.

நியாயாதிபதிக்குச் சந்தேகம் பிறந்து மறுநாள் வரச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு அவர்கள் வருகிறதற்கு முன்னே நியாயஸ்தலத்துக்குச் சமீபத்திலே சேறாக்கி வைத்தான்.

மறுநாள் அவ்விருவரும் அந்த வழியாக நடந்து வந்தார்கள். சமீபத்தில் வந்தவுடனே அளவு சரியாக இருக்கிற இரண்டு சொம்புகளில் நிறைய நீர்மொண்டு

கொண்டுவரச் சொல்லிப் பேருக்கு ஒவ்வொரு சொம்பு நீர் கொடுக்கச் சொன்னான். இரண்டு பசுக்காரி அந்த நீரிலே பாதியினாலே காலுகளைச் செ(வ்)வையாய்க் கழுவிக்கொண்டு பாதி மீதியாக வைத்தாள். இருபது பசுக்காரி ஒரு சொம்பு நீரும் வார்த்துக் கழுவியும் பாதிச் சேறுகூடப் போகவில்லை.

அதை மரியாதைராமன் பார்த்து, கடன் வாங்கினவளை அழைத்து, " நீ இருபது பசு வைத்துக்கொண்டிருந்தாலும், குடித்தனத் திறமை இல்லாதவளென்றறிந்தேன். அது எப்படியென்றால் ஒரு சொம்பு நீர் முழுதும் விட்டுக் கழுவியும் பாதிச் சேறாயினும் உன் காலிலே போகவில்லை. அவளோ வென்றால் அரைச்சொம்பு நீராலே தன் காலிலே எவ்வளவும் சேறில்லாமல் கழுவினதால் குடித்தனத் திறமையுடையவளா யிருக்கிறாள். ஆகையால் நீ அவளிடத்திலே நெய் கடன் வாங்கினதற்குச் சந்தேகமில்லை" என்று மோசத்தை வெளிப்படுத்தி வாதி பச்சம் (பக்கம்) தீர்ப்புச் செய்தான்.

**பள்ளமுள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும்** என்ற பழமொழிப்படியே மோசம் செய்தவளிடத்திலே தெண்டினைச் சம்பாதித்தது.

## 7. உனக்கு இஷ்டமானதைக் கொடு என்றது

ஒருவன் தன் மரண காலத்திலே தன்னிடத்திலிருந்த பதினாயிரம் வராகன்களையும் தனக்குப் பழக்கமுள்ள ஒரு சாவுக்காரி கையிலே கொடுத்து, "என் புத்திரன் பெரியவனான பின்பு இந்த வராகன்களில் உனக்கு இஷ்டமானதைக் கொடு" என்று சொன்னான்.

பின்பு சாவுக்காரி அதுகளைத் தன் வீட்டிலே கொண்டு போய் வைத்திருந்தான். பிள்ளை பெரியவனான பின்பு சாவுக்காரி இடத்திற்குப் போய்த் தன் தகப்பன் கொடுத்த பொருளைக் கேட்டான்.

அதற்குச் சாவுக்காரியானவன், "உன் தகப்பன் எனக்கு இஷ்டமானதை உனக்குக் கொடுக்கச் சொன்ன படியினாலே எனக்கு இஷ்டமானதிந்தத் தொகைதான்" என்று ஆயிரம் வராகன் கொடுக்கப் போனான்.

அந்தப் பிள்ளையாண்டான் வேண்டாமென்று விசனத்தை அடைந்துபோய் மரியாதைராமனிடத்திலே பிராது பண்ணினான். மரியாதைராமன் சாவுக்காரியை அழைப்பித்து விசாரித்து அவன் வாய்ச் சொல்லைக் கொண்டே "உனக்கு இஷ்டமானது ஒன்பதினாயிரம் வராகனாகையால் நீ எடுத்துக்கொள்ள நினைத்தாய். அந்த ஒன்பதினாயிரம் வராகன் இந்தப் பிள்ளைக்குக் கொடுத்துவிடு. இந்தப் பிள்ளைக்குக் கொடுக்க நினைத்த உனக்கு இஷ்டமாகாத ஆயிரம் வராகனை நீ யெடுத்துக் கொள்" என்று தீர்ப்புப் பண்ணினான்,

**ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறந்தால் வருமோ** என்கிற பழமொழிப்படிக்குச் சாவுக்காரியினுடைய அதி ஆசை பயன்படாமற் போயிற்று.

---

## 8. வழியில் வித்துவான் திரவியத்தைப் பிடுங்கிக்கொண்டது.

ஒருவித்துவான் தேசாந்திரம் போய்க் கொஞ்சம் திரவியம் சம்பாதித்துக்கொண்டு ஊரின் அருகே தனிமையாக வருகையில் ஒருவன் வந்து அவன் மூட்டையைப் பிடுங்கிக் கொண்டு, "இது என் மூட்டை" என்று சொல்லிக்கொண்டு தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

வித்துவான் மரியாதைராமனிடத்துக்குப் போய் 'பிராது செய்தான். மரியாதைராமன் அந்தத் திருடனை அழைப்பித்துக் கேட்க, திருடன், "நானொன்றும் அறியேன்" என்று பொய்ச் சத்தியம் செய்தான்.

அதைக்கேட்டு நியாயாதிபதி திருடனுக்கு, வீட்டுக்குப் போக உத்தரவு கொடுத்துவிட்டு, அவனுக்குத் தெரியாமல் அவன் பின்னே தானே இரண்டுபேர் சேவகரை அனுப்பினான். திருடன் தன் வீட்டுக்குள்ளே போன உடனே, அவன் பெண்சாதி, "நீ போன காரியம் எப்படி முடிந்தது" என்று கேட்டாள். அதற்கு அவன், "நான் ஒன்றும் அறியேன் என்று ஏமாற்றிவிட்டேன்" என்று சொன்னான்.

அந்தச் சொல்லை அவ்வேவுகாரர் ஒளிந்திருந்து கேட்டுப்போய், நியாயாதிபதியிடம் சொன்னார்கள். நியாயாதிபதி திருடனைப் பிடித்துக்கொண்டு வரச்சொல்லி **அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும்** என்றபடியே **அடிப்பித்து** நன்றாக விசாரித்து, அவன் வாயைக்கொண்டே நிஜத்தை வெளிப்படுத்தி அவன் திரவியத்தை வித்துவானுக்கு வாங்கிக்கொடுத்துத் திருடனுக்குச் சாஸ்திரப்படி தெண்டினையும் செய்தான்.

# 9. தான் வாங்கின செம்புக்கல்லை அறியேன் என்றது

ஒருவன் ஒரு வர்த்தகனிடத்தில் விலையுயர்ந்த ஒரு செம்புக்கல்லைக் கொடுத்து, "இதைவைத்து வை. நான் யாத்திரை போய்வந்து வாங்கிக்கொள்கிறேன்" என்று சொல்லிப் போய் நாலு வருசம் கழிந்த பின்பு வந்து செம்புக் கல்லைக் கேட்டான்.

"என்னிடத்திலே அதை முன்னே தானே நீ வாங்கிக் கொண்டு போய்விட்டாய்" என்று சாதித்து அப்போது தன் வீட்டிலே சேறெடுக்க வந்த வண்ணான், அம்பட்டன், குசவன் இம்மூன்று பேரையும் பொய்ச் சாட்சி சொல்ல ஏற்படுத்தினான்.

செம்புக்கல்லுக்காரன் அதை அறிந்து மரியாதை ராமனிடத்திலே போய்த் தன் செம்புக்கல்லை அபகரித்ததை யும் பொய்சாட்சிகளை ஏற்படுத்தினதையும் சொல்லிக் கொண்டான்.

மரியாதைராமனானவன் அந்த மர்மம் தெரிந்து கொண்டு வர்த்தகனையும் அவன சாட்சிக்காரரையும் அழைப்பித்து விசாரணை செய்து அதன் பின்பு வாதி பிரதி வாதி சாட்சிக்காரரென்னும் முத்திறத்தாராகிய அய்ந்து பேரையும் ஒருவனோடொருவன் பேசாமல் இருக்கும்படி யாகத் தனித்தனியே சேவகர் கையில் வசப்படுத்திக் காவலிலே வைத்துக் களிமண்ணாலே அந்தச் செம்புக் கல்லைப் போல உருவம் செய்துகொண்டு வரும்படியாக உத்தரவு கொடுத்தான்.

வாதியும் பிரதிவாதியும் அந்தச் செம்புக்கல்லுக்குத் தகுந்த அளவாகவும் ஒரு மாதிரியாகவும் செய்துகொண்டு வந்தார்கள்.

செம்புக்கல்லினுடைய உருவமே என்றும் பார்த்திராச் சாட்சிக்காரர் மூன்று பேருக்குள்ளே வண்ணான் தோய்க்கிற கல்லைப் போலவும் அம்பட்டன் தீட்டுகிற கல்லைப் போலவும் வேறு வேறு மாதிரியாய்ச் செய்துகொண்டு வந்தார்கள்.

அந்த வித்தியாசத்தினாலே நியாயாதிபதிக்கு உண்மை தெரிந்து உடைமைக்காரருக்கு அந்தச் செம்புக்கல்லும் மற்றவர்களுக்குத் தகுதியான தெண்டினையும் கிடைக்கும்படி செய்தான். **எட்டியுடன் சேர்ந்த இலவுந் தீப்பட்டது** என்றபடியே மோசம் செய்த பிரதிவாதியுடன் சேர்ந்த சாட்சிக்காரரும் அவனுக்கு வந்ததை அனுபவித்தார்கள்.

## 10. அயலான் பெண்சாதியைத் தன் பெண்சாதி என்றது*

ஒருவன் தன் பெண்சாதியை அழைத்துக்கொண்டு ஊர்ப்பயணம் போகையில் வழியிலிருக்கிற ஆற்றிலே புருசன் முன்னும் பெண்சாதி பின்னுமாகப் போகிறபோது மற்றொருவன் இவர்கள் பின்னாலே இறங்கிவந்தான்.

இவன் வருகிறதை அவர்கள் பாராமல் போகும்போது தண்ணீர் ஆழமாக இருக்கிற இடத்திலே அந்த ஸ்திரீயானவள் புடவையை நனையாமல் தூக்கிக்கொண்டு போகையால் பின்னே வருகிறவன் அவள் அடித்துடையிலே இருக்கிற ஒரு மச்சத்தை அடையாளமாகப் பார்த்துக்கொண்டு கரையேறினவுடனே அந்த ஸ்திரியைத் தன் பெண்சாதி என்று சொல்லி, அவள் புருஷன் அவளை அழைத்துக்கொண்டு போகவொட்டாமல் தடுத்தான்.

அவ்விருவரும் வழக்காடிக்கொண்டு நியாயாதிபதியாகிய மரியாதைராமனிடத்திற்குப் போனார்கள். அவள் புருஷன் 'என் பெண்சாதியைத் தன் பெண்சாதியென்று இவன் நிபம் சொல்லுகிறான்'' என்று பிராது செய்தான். நியாயாதிபதி அந்த அந்நியனைக் கேட்கும்போது அவளைத் தன் பெண்சாதி என்று சாதித்தான்.

நியாயாதிபதி, 'உங்களிலே யாருக்காவது சாட்சியுண்டோ?' என்று கேட்டான். சொந்தப் புருஷன், நாங்கள் நெடுந்தூரத்திலிருந்து வருகிறபடியால் எங்களுக்குச் சாட்சியில்லை'' என்றான். பழி பாவத்திற்கு அஞ்சாத

---

* தெரியா திமைக்குற்றம் கண்ணுக்கென் றெய்திடும் தீவினைகள்
கரியாய் வழக்குக்கள் சொல்பவர்க்கே கொண்ட காதலன்முன்
சரியாய் மறுச்சொன்ன வனுக்குப் பாரிஇத் தையலென்ற
மரியாதி ராமன் கதைபோற், குறுங்கை மலைநம்பியே.
—நம்பி சதகம் 81

துஷ்டனானவன், எனக்குச் சமீபத்திலே சாட்சியில்லை. ஆனால் இவளை என் பெண்சாதியென்று ருசுக் கொடுக்கிறதற்கு ஒரு திஷ்டாந்திரம் கொடுக்கிறேன்.

அது என்னவென்றால் நான் அனுபோகசாலி ஆகையால் இவன் அடித்துடையிலே ஒரு மச்சமிருக்கிறது. ஸ்திரீகளை விட்டுச் சோதித்து அறியலாம்" என்றான்.

அப்படியே சோதித்து அறிந்த பின்பு அந்த ஸ்த்ரீயை "உன் புருஷன் யார்?" என்று கேட்டான. சொந்தப் புருஷனையே காட்டினாள். அதறகு மேலே சந்தேகம் பிறந்து மரியாதைராமன் அந்த ஸ்த்ரீயைப் பெண்டுகள் காவலிலும் மற்றிரண்டு பேரையும் புருஷர்கள் காவலிலும் வைத்து மறுநாள் உதயத்திலே அவ்விருவரையும் ஒரு இடத்திறகு அழைத்துக்கொண்டு வரச்சொல்லி, கொலை செய்வோனை அழைப்பித்து, "இவ்விருவருக்குள்ளே ஒரு ஸ்திரியின் கற்பை அழிக்கப் பிரயாசைப்படுகிற மகாபாதகன் இன்னான் என்று உனக்கு முன்னே அறிவித்தேனல்லவா? இன்னம் நிஜத்தைச் சொல்லாமையால் அவனை இப்போதே வெட்டிப் போடு" என்று உத்தரவு கொடுத்தான். அவன் கத்தியை உருவிக்கொண்டு போகையில் மோசக்காரன் பயந்து, "உண்மையைச் சொல்லி விடுகிறேன். என்னை வெட்ட வேண்டாம்" என்று ஆற்றிலே தான் கண்ட மச்சத்தைக்கொண்டு வியாச்சியமாடத் தொடங்கியதை உண்மையாகச் சொல்லிவிட்டான்.

நியாயாதிபதி துஷ்ட்டனுக்குத் தகுதியான தெண்டினையைச் செய்வித்து அந்த ஸ்த்ரியைச் சொந்தக்காரனிடத்திலே ஒப்பித்தான். **அடாத காரியம் செய்தார் படாத பாடு படவேணுமென்கிற** பழமொழியை அறிந்த துஷ்ட்டன் அப்போதுதான் மெய்யென்று அறிந்தான்

## 11. யானைக்கும் பானைக்கும் சரி என்றது

ஒரு துலுக்கனிடத்தில் ஒரு வெள்ளாளன் தன் பிள்ளை கலியாணத்திலே ஊர்கோலம் காட்ட யானை இரவலாக வாங்கிக்கொண்டு வந்தான்.

அந்த யானை ஊர்கோலம் வந்துகொண்டிருக்கிற போது ஆவேசமாகச் செத்துப்போச்சுது. அந்த வெள்ளாளன் உடனே துலுக்கனிடத்துக்குப் போய், "தெய்வீகமாக உன்னுடைய யானை செத்துப்போச்சுது. அதற்கு விலையானாலும் பதிலாக யானையானாலும் உனக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

அதற்குத் துலுக்கன் "நீ சொன்ன இரண்டுக்கும் நான் சம்மதிக்கிறதில்லை. என் ஆனையே எனக்கு வேணும்" என்று சொல்லிப் பின்பு மரியாதைராமனிடத்துக்குப்போய்ச் சொல்லிக்கொண்டான்.

மரியாதைராமன் பிரதிவாதியை அழைப்பித்துக் கேட்கும்போது அவன் நடந்த உண்மையைச் சொன்னான். மரியாதைராமன் துலுக்கனைப் பார்த்து. "நீ தெய்வீகமாக நேரிட்டபடியால் இதில் யானையானாலும் வாங்கிக் கொள்ளு அல்லது விலையானாலும் வாங்கிக் கொள்ளு" என்று பலவிதத்திலும் சமாதானம் சொன்னான்.

அதற்கு அந்த முரட்டுத் துலுக்கன், "இரண்டுக்கும் நான் சம்மதிக்கமாட்டேன். அந்த யானையே எனக்கு வேணும்" என்றும், "வேறொன்றும் வாங்கேன்" என்றும் கடவுள் பேரால் ஆணையிட்டான்.

அதைக் கேட்டு வெள்ளாளன் கலங்கினான்.

பின்பு மரியாதைராமன் ஆலோசித்து "நீங்கள் நாளைய தினம் வாருங்கோள்" என்று அனுப்பிவிட்டு ரகசியமாக வெள்ளாளனை அழைத்து, "நாளையதினம் நீ வரவேண்டாம். உன் வீட்டு நடையிலே கதவோரமாகப் பழம் பானைகள் அடுக்கி வைத்துக் கதவைச் சும்மா சாத்திவைத்துக் கொண்டிரு. துலுக்கன் வந்தவுடனே, 'உன் எதிரி வரவில்லை ஆகையால் நீ போயி அழைத்துக்கொண்டு வா' என்று அனுப்புகிறேன். அவன் அவசரமாக வந்து கதவைத் திறப்பான். அப்போது பானைகளெல்லாம் நெரிந்துபோம். பின்பு இவன் எங்கள் பெரியோர்கள் நாள் முதல் கொண்டு ஆயிவந்த பானைகளை உடைத்துப் போட்டானென்று அழுது அயல் வீட்டாருடனே கூச்சலிட்டுச் சொல்லிக்கொள்ளும். அதற்காக அவன் என்ன சமாதானம் சொன்னாலும் என் பானையே எனக்கு வேண்டுமென்று நீ வந்து பிராது பண்ணிக்கொள்" என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

மறுநாளந்தப்படியே நடந்தபின்பு வெள்ளாளன் வந்து, "வெகுகாலமாக ஆயிவந்த என் பானைகளை உடைத்துப் போட்டான். என் பானைகளே எனக்கு வேணும்" என்றான், அதற்குமேல் மரியாதைராமன் அந்தத் துலுக்கனைப் பார்த்து, "நீ இதற்கு என்ன சொல்லுகிறாய்" என்றான். அதற்குத் துலுக்கன் 'யானைக்கும் பானைக்கும் சரியாய்ப் போச்சுது போ" என்றான். **கனமூடன் கைப்பொருளிழப்பான் யோக்கியத்தைத்** துலுக்கன் தன்னிடத்திலே காட்டினான்.

## 12. சீட்டைக் கிழித்துக் கடன் வாங்கினதை இல்லை என்றது

ஒரு குடியானவன் ஒரு செட்டியினிடத்தில் சீட்டெழுதிக் கொடுத்து நூறு வராகன் கடன் வாங்கி இருந்தான். சிலநாள் போன பிற்பாடு செட்டியானவன் தன் கடனைக் கேட்டான்.

குடியானவன் "நாளைக் காலமே ஊருக்கப்புறம் கொல்லை மேட்டிலே இருப்பேன். அவ்விடத்திலே சீட்டைக் கொண்டுவந்தால் முதலும் வட்டியும் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னான்.

அந்தப்படியே சீட்டைக் கொண்டுபோனான். அதை வாங்கிப் பார்க்கிறது போலக் கிழித்துப் பக்கத்திலே மூட்டம் போட்டிருக்கிற நெருப்பிலே போட்டுவிட்டு, "உனக்குக் கொடுக்க வேண்டியது இல்லை" என்று போகச் சொன்னான்.

செட்டி துன்பத்துடன் மரியாதைராமனிடத்திலே சொல்லிக்கொண்டான்.

அவன் குடியானவனை அழைப்பித்து, "ஏன் சீட்டைக் கிழித்துப்போட்டாய்" என்று கேட்டான். அதற்கு அவன், "நான் இவனிடத்தில் கடன் வாங்கினதும் இல்லை. சீட்டைக் கிழித்ததும் இல்லை" என்று சொன்னான். செட்டியைத் தனியே அழைத்து, "சீட்டு எவ்வளவு நீளம்?" என்று நியாயாதிபதி கேட்டான். "சாணிருக்கும்" என்று சொன்னான். "உன்னைக் கேட்கும் போது

முழமென்று சொல்'' என்று சொல்லிவைத்து நியாயஸ் தலத்தில் அழைப்பித்து, செட்டியைப் பார்த்து, "நீ பொய் சொல்லாதே. அந்தச் சீட்டு எவ்வளவு நீளம்?" என்று கேட்டான். "அய்யா நான் மெய்யாகச் சொல்லு கிறேன். அதுவொரு முழுநீளச் சீட்டு. அதையும் கிழித்துப் போட்டுப் பணமும் வாங்கினதில்லையென்று பொய் சொல்லுகிறான்'' என்றான்.

குடியானவனுக்குக் கோபம் பிறந்து அவசரத்திலே, "அய்யா உங்களிடத்திலே தானே சாண் சீட்டை முழச் சீட்டென்று பொய் சொல்லுகிறானே. மற்ற இடத்திலே எத்தனை பொய் சொல்ல மாட்டான்'' என்றான்.

அதைக்கேட்டு நியாயாதிபதி அவனிடத்தில், "சீட் டெழுதிக் கொடுத்துக் கடன் வாங்காதிருந்தாயாகில் சாண் சீட்டென்று எப்படி அறிந்தாய்?" என்று சொல்லிப் பொய் சொன்னதற்காக அவனைத் தண்டித்துச் செட்டிக்கு வட்டியும் முதலும் கொடுப்பித்து விடும்படி கட்டளை யிட்டான். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதற்குக் குடியானவன் திஷ்டாந்திரமானான்.

## 13. எலுமிச்சங்காய் அளவு சாதம் போடச்சொன்னது

ஒருவன் வழிப்பயணம் போம்போது ஒரு சத்திரத்தி லிருக்கும் பார்ப்பாத்தி கையில் நாலு பணம் கொடுத்து, "எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. எலுமிச்சங்காயத் தனை சாதம் சீக்கிரமாகப் போடு" என்றான்.

அந்தப்படியே அவள் எலுமிச்சங்காயத்தனை சாதம் இலையில் வைத்தாள். அந்த மனிதன் அவளை நோக்கி, "நான் நாலு பணம் கொடுத்து உபசார வார்த்தையாக எலுமிச்சங்காயத்தனை சாதம் போடென்றேன். அதற்கு நீ இப்படிச் செய்தாயே! இது வயிற்றுக்குப் போதுமா?" என்றான்.

அதற்கு அவள், "எலுமிச்சங்காயத்தனை சாதந்தான் கேட்டாய். ஆகையால் அதற்கு மேல் நான் அதிகமாகப் போடமாட்டேன்" என்றாள்.

பின்பு அவன் மரியாதைராமனிடத்திற்குப் போய், இந்தச் சங்கதிகளைச் சொல்லிக்கொண்டு தன் பணத்தை வாங்கிக் கொடுக்க வேணுமென்று பிராது செய்தான்.

நியாயாதிபதி அவளை அழைப்பித்து, "இவன் கேட்டபடி எலுமிச்சங்காயத்தனை சாதம் போடுகிறே னென்று ஒத்துக்கொண்டாயா?" என்றான். அவள் 'ஆம்' என்றாள். "ஆனால் நீ அப்படியே செய்தாயா?" என்றான். "நான் அப்படியே செய்தேன். அவன் வீணாக வழக்காடுகிறான்" என்று அந்தச் சாதமும் இலையில்

அப்படியே இருக்கிறதென்று சொல்லி, சீக்கிரத்தில் ஓடி இலையோடே அந்தச் சாதத்தை எடுத்து வந்து காண்பித்தாள்.

மரியாதைராமன், "ஓகோ ஒரு சாதமாவது எலுமிச்சங்காயத்தனை பருமன் இல்லாதபடியால் இவன் பணத்தையாவது கொடுத்துவிடு. எலுமிச்சங்காயத்தனை பருமனுள்ள ஒரு சாதமாவது போடு" என்றான்.

அவள் அந்தத் தீர்ப்பைக் கேட்டுப் பயந்து அவன் கொடுத்த நாலு பணத்தையும் யாதொரு தடையும் செய்யாமல் கொடுத்துவிட்டாள். **மரத்தின் பழம் மரத்தண்டையே விழும்** என்றபடி பணத்திற்கு உரியவனிடத்தே பணம் சேர்ந்தது.

## 14. இரவல் வாங்கின மோதிரத்தை அறியேன் என்றது

ஒருவன் ஒரு கலியாணத்திற்குப் போகும்போது மற்றொருவனிடத்தில் இரவலாக ஒரு பொன் மோதிரம் வாங்கிக்கொண்டு போனான்.

சிலநாள் போன பின்பு மோதிரக்காரன் இரவலாக வாங்கிக்கொண்டவனுடைய கைவிரலிலே மோதிரத்தைக் கண்டு கேட்கும்போது, "இது என் மோதிரமாச்சுதே. உன்னிடத்தில் இரவலாக வாங்கினதென்று ஏன் பொய் சொல்லுகிறாய்? போ!" என்றான்.

சொந்தக்காரன் விசனத்துடனே மரியாதைராமனிடத்திலே போய்ச் சொல்லிக்கொண்டான்.

அந்த நியாயாதிபதி பிரதிவாதியை அழைப்பித்து விசாரித்த இடத்திலே, "நான் இரவலாக வாங்கினதில்லை. என் சொந்த உடைமைதான்" என்று சாதித்தான். சாட்சியில்லாமையினாலே உண்மையை வெளிப்படுத்த வேண்டி ரகசியத்திலே ஒரு மத்தியஸ்தனை அழைப்பித்து, "நான் அனுப்புகிற மோதிரத்தை அதிகமாக உரைத்து மாற்றையும் விலையையும் குறைத்துச்சொல்" என்று அனுப்பிவிட்டு வாதி, பிரதிவாதிகளையும் மோதிரத்தையும் சேவகன் வசப்படுத்தி, "மத்தியஸ்தனிடத்திலே, விலை மதித்துக் கொண்டுவா. இவ்விரண்டு பேருக்கும் பேர்பாதியாகக் கொடுத்து விடுவோம்" என்று அனுப்பினான்.

மத்தியஸ்தன் உரைக்கிறபோது சொந்தக்காரன் "பொன்னை அதிகமாக உரைக்கிறாய்" என்று பதைத்தான். மாற்றுச் சொல்லுகிறபோது "குறைத்துச் சொல்லுகிறாய்" என்று கூவினான். விலை சொல்லுகிறபோது "என்னுடைமையை இப்படி அநியாயமாக விலை மதிக்கவும் நேரிட்டதா?" என்று அழுதான். மற்றொருவன் சும்மாயிருந்தான்.

இதனாலே உடைமைக்காரனென்று அறிந்துகொண்டு அவன் பச்சம் தீர்ப்புச் செய்தான். **தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை என்பதை** அந்த மோசக்காரன் தன்னிடத்திலே காட்டினான்.

## 15. கோழி திருடி அறியேன் என்றது

ஒருத்தனுட கோழியை அண்டை வீட்டுக்காரி திருடிக் கொன்று தின்றுவிட்டாள். அவள் வீட்டுக்கு உள்ளே போன கோழி மறுபடியும் வராமற் போனதைப் பார்த்துக் கொண்டிருந்த சொந்தக்காரி அந்த திருடியினிடத்திற்குப் போய், "என் கோழி உன் வீட்டுக்குள்ளே வந்ததே. அது ஏதோ?" என்று கேட்டு, அவள், "நான் பார்க்கவே இல்லை" என்று சாதித்தபடியால் மரியாதைராமனிடத்திற்குப் போய் பிராது செய்தாள்.

அந்தத் திருடியை அழைப்பித்துக் கேட்டபோது "நான் அந்தக் கோழியைப் பார்க்கவேயில்லை" என்று சாதித்தாள்.

நியாயாதிபதி சாட்சியில்லாமையினால் அவ்விரண்டு பேருக்கும் வீட்டுக்குப்போக உத்தரவு கொடுத்து விட்டுக் கொஞ்ச தூரத்திலே போகிறபோது கிட்ட வருகிறவர் களைப் பார்த்து, "ஒரு ஸ்திரியானவள் கோழியைத் திருடித் தின்றுவிட்டு அதன் மயிரையும் தலையிலே வைத்துக் கொண்டு இந்தச் சபையிலே நின்று நான் அறியேன் என்று சாதித்துவிட்டுப் போகிறாளே! அவளுடைய தைரியத்தைப் பார்த்தீர்களா?" என்று அவளுக்குக் கேட்கும்படிக்குச் சொன்னான்.

அந்தத் திருடி இந்தச்சொல் தன் காதிலே விழுமாத்தி ரத்திலே கையினாலே மெள்ளத் தன் கொண்டையைத் தடவிப் பார்த்தாள்.

அதைக் கண்டு நியாயாதிபதி அந்தத் திருடியைப் பிடித்துக்கொண்டு வரச்சொல்லி அவள் வாயைக்கொண்டே திருட்டை வெளிப்படுத்தி அதற்குத் தகுந்த அபராதம் வாங்கிக்கொண்டு கோழிக்காரிக்குக் கோழி பதிலுக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்தான்.

**பொய் நின்று மெய்யை வெல்லுமா** என்றதை அத் திருடி அன்றைக்குத்தான் நிஜமென்று நம்பினாள்.

# 16. வைத்த பணத்தைத் திருடிக்கொண்டு அறியேன் என்றது

ஒரு பார்ப்பான் யாத்திரை போக வேண்டி நிமித்தியம் தான் நெடுநாளாகப் பிச்சையெடுத்துச் சம்பாதித்த ஆயிரம் பூவராகனையும் ஒரு தவலைக்குள்ளே அடியிலே போட்டு மேலே துவரம் பருப்பை நிறையப் போட்டுத் தனக்கு விகிதமாய் நம்பிக்கையாயிருக்கிற ஒரு கோமுட்டியினிடத்திலே தானும் தன் பெண்சாதியுமாக எடுத்துக்கொண்டு போய் "இந்தத் தவலைப் பானையிலிருக்கிற துவரம் பருப்பைத் தொடாமல் பத்திரமான இடத்திலே வைத்துக் காப்பாத்தி நாங்கள் யாத்திரை போய் வந்த பிற்பாடு எங்கள் கையிலே கொடு" என்று சொல்லி வைத்துவிட்டு யாத்திரை போய்விட்டான்.

ஒரு நாள் ராத்திரியில் கோமுட்டி வீட்டில் விருந்தாளிகள் மிகுதியாக வந்தார்கள். அந்த வேளைக்குத் துவரம் பருப்பு எங்கும் அகப்படாமையாலே பார்ப்பான் வைத்த துவரம்பருப்பை இப்போது எடுத்துக்கொண்டால் பதிலுக்லுக் கொடுத்துவிடலாமென்று கோமுட்டி தன் பெண்சாதியை எடுத்துக்கொண்டு வரச்சொன்னான்.

அவள் தவலையை எடுத்துக் கொண்டுவந்து கொடுக்கிறபோது கீழே பருப்பும் மேலே வராகனுமாக விழுந்ததுகள்.

அவ்விரண்டு பேரும் சந்தோஷத்தை அடைந்து பருப்பையும் வராகனையும் எடுத்துக்கொண்டு மறுநாள் வேறு

துரம்பருப்புச் சம்பாதித்துத் தவலை நிறையப் போட்டு வைத்தார்கள்.

யாத்திரை போன பிராமணன் தன் பெண்சாதியுடன் சில மாசங்கழித்து வந்து கோமுட்டி வீட்டிலே வைத்த தவலையை வாங்கிக்கொண்டு போய்ச் சோதித்தான். வைத்த வராகன்களைக் காணாமல் மிகுந்த விசனத்தை அடைந்து, கோமுட்டி வீட்டுக்குப் போய் அவன் பெண் சாதிக்கும் வெகு உபசாரங்கள் சொல்லிப் பணத்தைக் கேட்டு அவர்கள் நீங்கள் வைத்த துவரம் பருப்புத் தவலையைக் கொடுத்துவிட்டோம். மற்றொன்றும் நாங்களறியமாட்டோ மென்று உடாகித்தபடியினாலே மரியாதைராமனிடத்துக்குப் போய்ப் பிராது செய்தார்கள்.

அவன், கோமுட்டியையும் அவன் பெண்சாதியையும் அழைப்பித்து அனேகவித உபாயங்களினாலே விசாரணை செய்து உண்மை வெளிப்படாமையினாலே தனக்குள்ளே ஒரு உத்தரவு செய்துகொண்டு பூதத்தைப்போல் ஒருகூண்டு செய்து அதற்குள்ளே ஒருஆளை ஒளித்துவைத்துக் கோமுட்டியையும் அவன் பெண்சாதியையும் அந்தக் கூண்டை எடுத்துக்கொண்டு பெரிய ஒருதேவாலயத்தைப் பிரதச்சணமாக வந்து சத்தியம் செய்யும்படி உத்தரவு கொடுத்தான்.

அவர்கள் தலைமுழுகி அந்தப் பூதத்தை எடுத்துக் கொண்டு பாதி தூரம் போகையில் கோமுட்டி தன் பெண்சாதியைப்பார்த்து, “ஓகோ என்ன காரியம் செய்து விட்டோம். நாம் பொய் சத்தியம் பண்ணும்படியாக வந்து

நேரிட்டுதே. இதனாலே என்ன அபாயம் வருமோ?" என்று சொல்லிக்கொண்டு வந்தான்.

அதைக் கேட்டு நியாயாதிபதிக்குத் தெரியப் படுத்தினான்.

நியாயாதிபதி பயமுறுத்தி அவர்கள் வாயைக் கொண்டே நிஜத்தை வெளிப்படுத்திப் பார்ப்பான் அவன் வைத்த ஆயிரம் வராகனையும் வாங்கிக்கொடுத்துக் கோமுட்டிக்குத் தகுதியான தெண்டினையும் செய்தான். **தீரா வழக்கிற்குத் தெய்வமே சாட்சி என்பது இந்த வழக்குலே விளங்கிற்று.**

## 17. நெல் ஒப்பந்தக்காரன் விலை மோசம் செய்தது

ஒரு வர்த்தகன் ஒரு குடித்தனக்காரனிடத்திலே போய், "நெல்லு வாங்கிக் கொள்ளுகிறேன், மாதிரி கொண்டுவா" என்றான்.

அவன் ஒரு சின்ன கூடையிலே குறுணி நெல்லைக் கொண்டுவந்து காண்பித்தான். "இதல்லாமல் வேறை உண்டா?" என்று கேட்டான். "வேறை கிடையாது. ஒரு வராகனுக்கு வாங்கினாலும் இதுதான். பத்து வராகனுக்கு வாங்கினாலும் இதுதான்" என்றான்.

வர்த்தகன் பத்து வராகனைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குப்போய்ப் பொதிமாட்டை ஓட்டிக்கொண்டு "என் பத்து வராகனுக்கும் நெல்லை அள" என்று கேட்ட இடத்தில் மாதிரி காட்டினான் ஒரு கூடை நெல்லைக் கொண்டு வந்துகொட்டி "எடுத்துக்கொண்டு போ" என்றான்.

"என்னுடைய பத்து வராகனுக்கும் இந்த நெல்லுத் தானோ?" என்றான். "நான் அப்போது தானே நீ எவ்வளவு தொகைக்கு வாங்கினாலும் இது தான் என்று சொன்னேன். அதுக்குச் சம்மதிப்பட்டுத்தானே பத்து வராகனைக் கொடுத்தாய். ஆகையால் இதை எடுத்துப்போ" என்றான்.

வர்த்தகன் மரியாதைராமனிடத்திலே பிராது பண்ணிக்கொண்டான்.

அந்த நியாயாதிபதி குடித்தனக்காரனை அழைப்பித்து விசாரித்த இடத்திலே தான் சொன்ன பிரகாரம் சரியாக நடந்ததாகச் சொன்னான்.

நியாயாதிபதி, "இதற்குத் தீர்ப்புச் சொல்ல ஒரு மாதம் செல்லும். அதுவரைக்கும் நீங்கள் இரண்டு பேரும் ஒரு வீட்டிலே சாப்பிட்டுக்கொண்டு இருங்கள்" என்று திட்டம் செய்து வர்த்தகனைப் பார்த்து, "சமையல் பண்ணுகிற சாதத்தில் வேளைக்கு வேளை நீயும் சாப்பிட்டுக் குடித்தனக் காரனுக்கும் பாதிசாதம் போடு" என்று சொல்லி அப்புறம் ரகசியத்தில் "நீ வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு அவ னுக்கு ஒரு சாதத்திலே பாதி சாதம் பிட்டுவை" என்று தகுதி சொல்லிக்கொடுத்து அனுப்பிவிட்டான்.

அவன் அப்படியே செய்தபடியால் இரண்டு வேளை பட்டினி இருந்து பார்த்துப் பசி பொறுக்கமாட்டாமல் நியாயாதிபதி இடத்திலே சொல்லிக் கொண்டான்.

அவன் வர்த்தகனை அழைப்பித்து, "நீயேன் அவ னுக்குச் சாப்பாடு போடவில்லை" என்று கேட்க, "உங்கள் உத்தரவின்படி நான் பாதிசாதம் போட்டேன், ஆனால் இவன் சாப்பிடவில்லை" என்றான்.

அதற்குக் குடியானவன், "இவன் ஒரு சாதத்தில் பாதி கிள்ளிவைத்துச் சாப்பிடச் சொன்னால் எப்படிச் சாப்பிடு கிறது" என்றான்.

"இவன் ஒரு கூடையிலே கொண்டுவந்து எவ்வளவு தொகைக்கு வாங்கினாலும் இதுதானென்று மாதிரி

காட்டினான். நெல்லைப் பத்து வராகனுக்குக் கொடுக்க வந்தானே. ஆகையால் நீங்கள் சொன்னபடிக்கு இப்படியே பாதிச்சாதந்தான் போடுவேன்'' என்றான்.

அதைக்கேட்டு நியாயாதிபதி பிரதிவாதியைப் பார்த்து, ''ஊர் விலைப்படி அவனுக்குப் பத்து வராகனுக்கும் நெல்லை யாகிலும் கொடு, இல்லாவிட்டால் ஒரு மாதம் வரைக்கும் அவன் போடுகிற பாதி சாதத்தையாகிலும் சாப்பிட்டுக் கொண்டு இரு'' என்றான்.

அது கேட்டுப் பிரதிவாதி எதிர் உத்தரவு கொடுக்க வழியில்லாமல் ஊர் விலைப்படி நெல்லைக் கொடுக்கவே ஒத்துக்கொண்டான், அழுக்கை அழுக்குக் கொல்லும். இழுக்கை இழுக்கு வெல்லும் என்கிறது இவ்வழக்கிலே நிஜமாக நம்பப்பட்டது.

## 18. ஒருவன் காதுக்கடுக்கனை மற்றொருவன் திருடியது

ஒரு சத்திரத்தில் இரண்டு பேர் வழிப்போக்கர். ஒருவனுக்கொருவன் எதிர்முகமாகத் தலைவைத்துப் படுத்துக் கொண்டார்கள். நித்திரை வேளையிலே வலது காது கீழாகப் படுத்திருந்தவனுடைய இடது காதுக் கடுக்கனை இடது காது கீழாகப் படுத்துக் கொண்டிருந்தவன் கழற்றித் தன் வலது காதிலே போட்டுக்கொண்டான்.

விழித்துக்கொண்ட பிற்பாடு கடுக்கனை இழந்தவன் "என் கடுக்கனை ஏன் கழற்றிக் கொண்டாய்" என்று கேட்க அவனும், "என் காதுக் கடுக்கனை நீதான் கழற்றிக் கொண்டாய்" என்றான்.

இப்படிக் கலகப்பட்டு, கடுக்கனையிழந்தவன் மரியாதைராமனிடத்திலே சொல்லிக்கொண்டான்.

நியாயாதிபதியாகிய அவன் திருடனை அழைத்துக் கேட்டவிடத்தில் அவனும் அப்படியே சொன்னபடியினாலே "நீங்கள் இருவருமெப்படிப் படுத்துக் கொண்டிருந்தீர்களோ அப்படிப் படுத்துக்கொண்டு காண்பியுங்கள்" என்றான்.

அப்படியே காண்பித்தபோது திருடனைப் பார்த்து "உன் இடது காது கீழே இருந்தபடியால் அதிலிருந்து எப்படிக் கழற்றலாம்? அவன் இடது காது மேலே இருந்தபடியால் எளிதாகக் கழற்றிக் கொண்டாய். நீதான் திருடன்"

என்று சொல்லி உடைமைக்காரருக்குக் கடுக்கனை வாங்கிக் கொடுத்து, திருடனை இருபத்துநாலு அடி அடித்து ஆறு மாதம் காவலிலிருக்கச் செய்தான்.

அந்தத் திருடன் பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும் என்றபடி காத்துக்கொள்ளவும் தெரியாமல் போயிற்றே என்று துன்பமடைந்தான்.

## 19. ஒருவன் மற்றொருவனின் பசுவின் கன்றுகளை மாற்றியது

ஒரு சமுசாரிக்கு ஒரு பசுமந்தை இருந்தது. அதன் பச்சத்தில் கொண்டிருக்கிற சமுசாரி தான் இல்லாத போதெல்லாம் தன் மந்தையைப் பார்த்துப் பசுக்கள் வைத்துக் கொண்டிருக்கிறவனைப் பார்த்துக் கொண்டிருக்கச் சொல்லுவான்.

இப்படி இருக்கையில் அவன் இவனில்லாத தருணம் பார்த்துத் தன் மூன்று சொந்தக் கன்றையும் மந்தைப் பசுக்களில் ஊட்ட விட்டு அதுகளின் மூன்று கிடாரிக் கன்றை மாற்றிக் கொண்டான். பின்பு சில நாளைக்குள்ளே நோவு வந்து அந்த மந்தைப் பசுக்களெல்லாம் இறந்து போச்சுதுகள்.

பத்துப் பசுக்கள் வைத்துக கொண்டிருக்கிறவன் மாற்றிக்கொண்ட மூன்று கிடாரிகளும் யேரிகளும் பெரியதுகளாயிகன்று போட்டு, கறந்து கொண்டிருந்ததுகள்.

இப்படி இருக்கிற காலத்திலே ஒருநாள் மந்தைப் பசு வைத்துக் கொண்டிருந்தவன் பால், மோர் இல்லாமையினாலே "எனக்குக் கொஞ்சம் பால் வார்க்க வேணும்" என்று பத்துப் பசுக்கள் வைத்துக் கொண்டிருக்கிறவனைக் கேட்டான்.

அவன் ஒரு பசுவின் பாலைக் கறந்து கொடுத்தான். அதைச் சாப்பிட்ட உடனே, "இப்போது பால் கறந்த பசு என் பசு" என்று வழக்கிட்டு மரியாதைராமனிடத்திற்குப் போய்ப் பிராது செய்தான்.

அந்த நியாயாதிபதி அவனை அழைப்பித்து, "இவன் பசுவை நீ ஏன் அபகரித்தாய்" என்று கேட்டான். பிரதிவாதி, "அப்படி நான் செய்யவில்லை. செய்ததாகச் சாட்சிகளைக்கொண்டு நிஜப்படுத்தினால் தண்டனைக்கு உள்ளாவேன்" என்றான்.

நியாயாதிபதி வாதியைப் பார்த்து, "உன் பசு என்கிறதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான். "என் பசுவின் பாலினுடைய ருசி எனக்குத் தெரியும்" என்றான்.

அதைக்கேட்டு நியாயாதிபதி இருவரையும் பதினைந்து நாள் பொறுத்து வாருங்களென்று அனுப்பி விட்டு, ஆட்டெருவும் மாட்டெருவும் தட்டை எருவும் இம் மூன்றுந் தனித்தனியே மூன்று கீரைப்பாத்தியிலே போட்டுக் கீரை விரையை விதைத்துப் பயிராக்கிக்கொண்டு அவ்விருவரையும் அழைப்பித்து, அந்த மூன்று கீரைப் பாத்தியிலிருக்கின்ற கீரைகளைப் பிடுங்கி ஒன்றாய்க்கலந்து சமையல் பண்ணிப் பசுவின் தயிர், எருமைத்தயிர், ஆட்டுத் தயிர் மூன்றையும் ஒன்றாகக் கலந்து இருவருக்கும் விருந்து செய்விக்கிற பாவனையாய்ச் சாப்பிடச்சொல்லி இதுகளை வடித்தார்கள்.

அப்போது பிரதிவாதி சீக்கிரமாகச் சாப்பிட்டுப் போனான். நியாயாதிபதி இவனைப் பார்த்துச், "சாப்பாடு எப்படி இருந்தது?" என்று கேட்க "நன்றாய் இருந்தது" என்றான்.

அதன்பின்பு வாதி சற்று நேரம் பொறுத்துச் சாப்பிட்டுப் போனான். அந்த வாதியைப் பார்த்து,

"சாப்பாடு எப்படி இருந்தது?" என்று கேட்க, "மூவெருவின் கீரையோடு முப்பாலின் தயிரு நாவு ருசி கண்டேன் இந்நாள்" என்றான்.

நியாயாதிபதி இவன் சொன்ன புத்தி யுத்திகளினாலே நிஜத்தை அறிந்துகொண்டு பிரதிவாதியைப் பார்த்து "நீ உண்மையைச் சொல்லாவிட்டால் தண்டனைக்குள்ளாவாய்" என்று கேட்கப் பிரதிவாதி "மந்தைப்பசுக்களிலே மூன்றுசேர் கன்றை ஊட்டவிட்டு மூன்று கிடாரிக் கன்றை மாற்றிக்கொண்டேன்" என்றான்.

அதுகேட்டு நியாயாதிபதி வாதி பச்சம் தீர்ப்புச் செய்தான். அறிவுள்ளவனுக்கு அரியதொன்றில்லை என்கிறபடி வாதி அதிகப் புகழ்பெற்றான்.

## 20. நால்வர்ப் பொதுவிலிருந்த ரத்தினத்தை அவர்களில் ஒருவன் திருடியது

ஒருவன் தன் மரண காலத்திலே தன் புத்திரர் நால்வருக்கும் பொதுவிலே நாலாயிரம் வராகனையும் சமானமான நாலு ரத்னங்களையும் ஒரு வீட்டிலே வைத்துப் பூட்டுப் பூட்டித் தன் பெண்சாதியினிடத்திலே சாவியைக் கொடுத்து உரிமையாயிருக்கிற வரைக்கும் இருக்கட்டும் என்று சொன்னான்.

பிற்காலத்திலே பிள்ளைகள் தங்களுக்குச் செலவுக்கு வேண்டியபோது நாலுபேராகச் சேர்ந்து சாவியை வாங்கித் திறந்து எடுத்துக் கொள்ளுவார்கள். அப்படியே செய்யும்போது ஒருதடவையில் இளையவன் ஒரு ரத்தினத்தைத் திருடிக்கொண்டான்.

அதைக் குறித்து நாலுபேரும் சச்சரவுபட்டு மரியாதைராமனிடத்திற் போய்ச் சொல்லிக்கொண்டார்கள்.

அந்த நியாயாதிபதி இவர்களைச் சிலநாள் தன் வீட்டிலே வைத்துக்கொண்டு இருந்து ஒருநாள் ராத்திரி வேடிக்கையாகப் பேசிக்கொண்டு இருந்து ஒருகதை சொன்னான்.

அதாவது ஒரு ராசா கன்னிகை தான்படித்து முடித்தவுடனே வித்தியாகுருவுக்குத் தட்சிணை கொடுக்கப் போனாள். அவள் அதிரூபவதி ஆகையால் இந்த வித்தியாகுரு அவள் மேலே ஆசைகொண்டு, "நான்

உன்னைக்கேட்பதற்கு நீ யாதொரு தடையும் சொல்லுகிறதில்லையென்று வாக்குக் கொடுத்தால் தட்சிணை எடுப்பேன்'' என்றான்.

''அப்படியே ஆகட்டும்'' என்றாள். அதற்கு அவன் ''உன்னோடொருதரம் கூட வேண்டும்'' என்றான். ''நீர் வித்யாகுருவாகையால் உமது கருத்தின்படி நடந்து கொள்ளுவது எனக்குக் கடமைதான். ஆனால் எனக்குச் சோபனஞ் செய்யும்போது முன்னே, உமது இஷ்டத்தை நிறைவேற்றாமல் நான் என் புருஷனைத் தொடுவதில்லை'' என்றாள்.

அப்படியே அவளுக்குச் சோபனம் செய்யும்போது ராத்திரி படுக்கைக்குப் போன இடத்தில், புருஷன் ஸ்திரி சரசம் செய்யத் தொடங்கியதைக் கண்டு தான் வித்தியா குருவுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறதைச் சொல்லித் தடுத்தாள்.

புருஷன் அவளுடைய சத்திய நிலையைக் கண்டு யோக்கியவதி என்று சந்தோஷப்பட்டுச் சொன்ன சொல்லைக் காப்பாற்றும்படியாக உத்தரவு கொடுத்து அனுப்பினான்.

அவள் போகும்போது வழியிலே திருடன் மடக்கிக் கொண்டான். அவனுக்குத் தான் போகிற காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரும்போது தன்னுடைமைகளை யெல்லாம் கழற்றிக்கொடுக்கிறேன் என்று பரவசம் பண்ணிக் கொடுத்துவிட்டுப் போய் வித்தியாகுருவைக்

கண்டு, "உமது இச்சையை நிறைவேற்ற வந்தேன், தயவு பண்ணி என்னைச் சீக்கிரத்தில் அனுப்பவேண்டும்" என்றாள். குருவானவர் அவளுடைய நிலைமையைக்கண்டு அஞ்சி "அம்மா நீ என் புத்திரி; குருபத்தி உனக்கு இருக்குதோ, இல்லையோ என்று சோதிக்கும் பொருட்டு அப்படிப் பட்ட காரியத்தை உனக்குச் சொன்னதேயல்லாமல் வேறு இல்லை. நீ சுகமாய்ப் போய் உன் புருஷனிடத்திற்சென்று சுகமாயிரு" என்று ஆசீர்வாதம் பண்ணி அனுப்பிவிட்டார்.

அப்படியே வரும்போது திருடனிடத்தில் வந்து தன் உடைமைகளெல்லாம் கழற்றிக்கொடுத்தாள். அவன் பயந்து இப்பேர்ப்பட்ட கற்புடைய உத்தமியை உலகத்திலே கண்டதில்லை என்று அதிசயப்பட்டு அந்த உடைமைகளுடனே தன்னிடத்திலே இருந்த உடைமைகளில் சிறிது கொடுத்து அனுப்பிவிட்டான்.

பின்பு புருஷனிடத்தில் வந்து, போனவிடத்தில் நடந்த வர்த்தமானம் எல்லாம் சொல்லப் புருஷன் சந்தோஷமுற்றான்.

பின் இருவருங் கூடிச் சுகத்திலே இருந்தார்கள்.

"இவர்கள் நாலு பேருக்குள்ளே யார் யோக்கியாள்" என்று கேட்டான்.

மூத்தவன், "குருவே யோக்கியன்" என்றான். அவனுக்கிளையவன், "ராசகுமாரத்தியே யோக்கியவதி" என்றான். அவனுக்கிளையவன், "திருடனே யோக்கியன்" என்றான்.

இதுகளைக் கேட்டவுடனே நியாயாதிபதி, "பாலைக் குடித்தவனுக்குப் பாலேப்பம் வரும். கள்ளைக் குடித்த வனுக்குக் கள்ளேப்பம் வரும்" என்கிற பழமொழிப்படியே திருட்டில் இச்சையுள்ளவன் திருடனே யோக்கியனென்று சொன்னானென்று அறிந்து இளையவன் வாயைக் கொண்டே உண்மையை வெளிப்படுத்தி, ரத்தினத்தை வாங்கி மற்றவர்களிடத்திற் கொடுத்துத் திருடியவனுக்குத் தகுந்த தெண்டினையும் செய்தான்.

## 21. நவமி புருஷனுடைய பெருமையைத் தெரிவிக்குதல் *

ஒரு குடியானவன் நாட்டுப்புறத்திலே ஒரு பெண்ணை விவாகஞ்செய்து இருவரும் வாழ்ந்துகொண்டிருக்கையில் அந்தப் பெண்ணுக்குத் தாயானவள் வந்து பெண்ணை அழைத்துக்கொண்டுபோய்த் திரும்பிப் பத்துத் தினத்திற்குள் அனுப்பிவிடுகிறேனென்று சொல்லித் தன்பெண்ணை யழைத்துக்கொண்டு போனாள்.

ஒரு மாதப் பரியந்தம் அனுப்பாததினால் மேற் சொல்லிய குடியானவன் தன் பெண்சாதியை அழைத்துக் கொண்டு வருகிற நிமித்தியம் மாமியார் வீட்டுக்குப் போய்த் தன் பெண்சாதியை அனுப்பும்படி கேட்டான். இன்றைய தினம் நவமி திதி ஆகையால் ஊர்ப் பிரயாணம் போகக் கூடாது என்று புரோகிதன் சொல்ல மாமியானவள் அப்படியே வேண்டியமட்டுஞ் சொன்னாள். என் பெண் சாதியை நானழைத்துக்கொண்டு போக நவமி என்ன பண்ணுமென்று சொல்லி உதாசினமான வார்த்தைகள் பேசி ஒரே மூர்க்கமாய்த் தன் பெண்சாதியை அழைத்துக்கொண்டு போனான். வழியில் வரும்போது மலபாதை தொந்தரவினால் தன் பெண்சாதியை மரத்தடியில் வைத்துவிட்டுக் குளத்தருகே போனான். அத்தருணம் நவமி புருஷன்

---

* இவ்விறுதிக் கதை சரசுவதி மகால் நூலக ஓலைச்சுவடியில் இடம்பெறவில்லை. அனைத்துப் பதிப்பிலும் இறுதிக்கதையாக இஃது இடம்பெற்றுள்ளமையை நோக்கி, இக்கதை இவண் "கதாசிந்தாமணி என்று வழங்கிய மரியாதைராமன் கதை" எனும் பழம்பதிப்பு நூலினின்று (1904) எடுத்தளிக்கப்பெறுகின்றது.

அவனைப் போலே மேற்படி ரூபங்கொண்டு பெண்ணை அழைத்துக்கொண்டு போனான். போய்க்கொண்டிருக்கையில் சொந்தப் புருஷன் வந்து மரத்தடியிலிருந்த பெண்சாதியைக் காணாமல் திகைத்து வழிபார்க்க ஒரு புருஷன் பின்னே போகக்கண்டு ஓடியருகில் வந்து, "ஏண்டா என் பெண்சாதியை இட்டுக்கொண்டு போகிறாய்" என்று கேட்டான். அவன, "என் பெண்சாதியாச்சே நீ யாரடா!" என்றுகேட்டான். அவ்விருவரையும் பார்த்து அந்த ஸ்திரீயானவள் இவர்களிருவரும் ஏக ரூபமாய் இருக்கப்பார்த்துத் தன் புருஷன் இன்னாரென்று குறிப்புக் காணமாட்டாமல் திகைத்து நின்றுவிட்டாள். இவர்களிருவரும் சச்சரவுபட்டு மரியாதைராமனிடத்திற் பிரியாது பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அதுவறிந்து உபயவாதிகளைப் பார்த்து அவயவங்களும் ரூபங்களும் ஏகரூபமாய் இருக்கக்கண்டு அந்த ஸ்திரீயைப் பார்த்து இவ்விருவர்களிலே உன் புருஷன் யாரென்று கேட்டான். அந்த ஸ்திரீயானவள், "ஐயோ நியாயாதிபதியே! இவ்விருவர்கள் ஒரே ரூபமாயிருக்கிறபடியால் எப்படிக் கண்டுபிடிப்பேன்? தமது நீதி நெறியினாலே இந்த ஆச்சரியத்தைக் கண்டுபிடித்து என் புருஷனை என்னோடு கூடச் சேர்க்க வேணுமையா" என்று மிகவும் பிரார்த்தித்தனள்.

அதற்கு நியாயாதிபதி தன்புத்தியினாலே ஆலோசித்து இது தெய்வமாய்கையென்று கண்டுகொண்டு இவர்களை நாளையதினம் வரும்படி திட்டஞ்செய்து அனுப்பிவிட்டுத் தன்னிஷ்ட தேவதையைத் தியானித்து ஒரு மண்பானையைச் சுண்டுவிரல் பருமன் மூக்குக் கரகமுள்ளதாய்ச் செய்து

கொண்டு வரச்சொல்லிச் சேவகனுக்கு உத்திரவு பண்ணி னான். அவனப்படியே செய்துகொண்டு வந்து கொடுத் தான். மறுநாட் காலையில் நியாயாதிபதி சமஸ்தானத் தில் உட்கார்ந்து கொண்டிருக்க மூவரையும் அழைத்து வரும்படி செய்து உபயவாதிகளைப் பார்த்து, "ஓய் புருஷர்களே! இந்த ஸ்திரீக்குப் புருஷன் நான்தானென்று பெருவழக்கிட்டுச் சொல்லுகிறபடியால் இதோ சபையில் வைத்திருக்கிற கரக பாண்டத்தில் நுழைந்து கரகமூக்கு வழியாக வருகிற புருஷனாரோ அவனிந்த ஸ்த்ரீயின் புருஷ னென்று நிச்சயித்துச் சொல்லலாம்". சொந்தப் புருஷனான வன் இது அசாத்தியமான காரியமென்று பேசாமல் சபை யிலே தலையிறங்கிக்கொண்டு சும்மா இருந்தான். நவமி புருஷரானவர் எழுந்திருந்து கரகத்தின் மூக்கின் வழியே வெளியிலே வந்து நின்றார்.

அப்போது மரியாதைராமன் சிம்மாசனத்தை விட் டிறங்கி அந்த மகாபுருடனைப் பிரதட்சண நமஸ்காரம் செய்து, "நீ எந்த தேவனோ! ஓ மகா புருடா! உமது நிச்சயத்தை வெளிப்படுத்தும் ஐயா" என்று பிரார்த்தித் தான். அப்போது, "நான் நவமிபுருடன்! இவன்பின் பெண்சாதியை யிட்டுக்கொண்டு வரச்சே புரோகிதன் 'இன்றைக்கு நவமி. பிரயாணமாகாது" என்று சொல்ல என் பெண்சாதியை நவமி என்ன செய்யலாம் என்று துராக் கிரதமா யிட்டுக்கொண்டு வந்தான். ஆகையால் நான் பரீட்சை செய்ய வந்தேன். இந்தச் சூச்சத்தையறிந்து நியாயத்தைக் கண்டுபிடித்தீரே நீயே சத்தியவான். நீயே இம்மையிலே சவுக்கியமும் மறுமையிலே முத்தியும் பெறு வாய்" என்று ஆசீர்வாதம் செய்து தன்னிருப்பிடத்திற்கு எழுந்தருளினார்.

பின்பு நியாயாதிபதி அவனைப் பார்த்து, "நீ பெரியோர்கள் வார்த்தையைத் தட்டி முரட்டுத்தனமாய் நடந்தபடியினாலே இந்த அவஸ்தை வந்தது. இனிமேல் அப்படித் துராக்கிரதஞ் செய்யாதே" என்று புத்திசொல்லி அவன் பெண்சாதியை அவனுடன் கூட்டி அனுப்பிவிட்டார். **நாள் செய்தது நல்லுற்றார் செய்யமாட்டார்கள்** என்கிற பழமொழிக்கு அத்தாட்சியாயிற்று.

*மரியாதைராமன் கதை — முற்றிற்று.*

# அருஞ்சொல் அகரநிரல்

[எண் : இந்நூலின் பக்க எண், முதன்முறை ஆளப்பெறும் இடம் மட்டுமே குறிக்கப்பெற்றுள்ளது. தமிழ்ப்பேரகராதியின்படி (Tamil Lexicon) பொருள் தரப்பட்டுள்ளது.]

அவயவங்கள் (48)—அங்கங்கள், உடலின் உறுப்புகள்

அனுபோகசாலி (21)—அனுபவம் மிக்கவன்

ஆயிவந்த (23)—ஆகி வருதல், நன்றாகக் கூடிவருதல் (To have auspicious progress)

உடாகித்த (33)—உடாய்த்தல்-ஏமாற்றுதல்

உதாசினம் (47)—இகழ்வு

உபயவாதிகள் (48)—வழக்கின் வாதி பிரதிவாதிகள்

ஊர்கோலம் (22)—ஊர்வலம் வருகை

ஏக ரூபம் (48)—ஒரே உருவம்.

கட்டப்பாரை (2)—கட்டபாரை—இரும்பினாலியன்ற மண்தோண்டு கருவி.

கடுக்கன் (38)—ஆடவர் காதணி.

கரகம் (48)—கமண்டலம், கெண்டி.

குறுணி (35)—எட்டுப்படி கொண்ட தானிய அளவு.

கெச்சைக்காய் (2)—கெச்சக்காய்—கழற்சிக்காய்.

சகாயம் (9)—துணை.

சஞ்சாரம் (10)—யாத்திரை.

சணப்பன் (11)—சணலினின்று நாரெடுக்கும் ஒரு சாதியைச் சார்ந்தவன்.
(Member of a Telugu caste whose profession was flax-dressing)

சமுசாரி (40)—குடியானவன்.

சாவுக்காரி (16)—சாவகாரி—சாவ்கார்—பணம் கொடுக்கல் வாங்கல் செய்பவன்.
(Native Banker, Sowcar)

சிசுஹத்தி (6)—குழந்தையைக் கொல்லுதல்.

சீலை (8)—துணி.

சுபத்திரகாரன் (8)—

சூச்சம் (4)—சூட்சம்—சூட்சுமம்—அறிவுநுட்பம், நுட்பமான அமிசம், உபாயம்.

சோபனஞ் செய்யும்போது (44)—இருது சாந்தி செய்யும்போது.

திரவியம் (17)—பொருள், பொன்.

திஷ்டாந்திரம் (21)—திஷ்டாந்தம்—உதாரணம், உறுதி.

துராக்கிரதம் (49)—துராகிருதம்—நிந்தை.

தெண்டினை (7)—தெண்டனை—தண்டனை.

தெய்வசகாயம் (9)—கடவுள் துணை.

தெய்வ மாய்கை (48)—தெய்வமாயை.

தேசாந்திரம் (4)—தேசாந்தரம்—அயல்நாடு.

நாழிகை (2)—அறுபது விநாடி கொண்ட நேரம்.

நிபம் (14)—கோள்—புறங்கூறல்.

நிமித்தியம் (32)—நிமித்தம்—காரணம்.

நியாயஸ்தலம் (6)—நியாயத்தலம்—நியாயவிசாரணை செய்யுமிடம்.

நியாயாதிபதி (2)—நீதி வழங்குவோன், நீதிபதி.

பச்சம் (3)—பட்சம்—பக்கம், கட்சி.

பரவசம் பண்ணிக் கொடுத்துவிட்டு (44) —பிரமாண உறுதி செய்துகொடுத்துவிட்டு

பரியந்தம் (47)—எல்லை.

பாரம் (12)—இடவேறுபாடு பற்றி 20 அல்லது 21 அல்லது 28 துலாங்கொண்ட நிறைவகை.

பிரதட்சணம் (33)—பிரதட்சிணம்—வலம்வருகை.

பிரயோசனம் (12)—சடங்கு (Ceremonial rites, as in a wedding)

பிராது (5)—முறையீட்டு விண்ணப்பம் (A complaint, suit)

பிரியாது (2)—பிராது.

பிறாந்து (12)—பிராந்து—பருந்து.

புழக்கடை (2)—புழைக்கடை, வீட்டின் பின் வாயிற் புறம்.

பூவராகன் (32)—வராக உருக்கொண்ட நாணய வகை.

மத்தியஸ்தன் (28)—நடுநிலைமையை உடையவன்.

மலபாதை (47)—மலங்கழிக்கும் முன் வயிற்றுள் உண்டாம் வேதனை.

ருசு (21)— அத்தாட்சி.

வர்த்தகன் (18)—வியாபாரி.

வர்த்தமானம் (45)—சமாசாரம் (Event, News)

வராகன் (16)—மூன்றரை ரூபாய் மதிப்புள்ளதும் பன்றி முத்திரை கொண்டதுமான ஒருவகைப் பொன் நாணயம்.

விகிதம் (32)—சினேகம்.

விசனம் (9)— துக்கம்.

வியாச்சியமாடல் (21)—வழக்காடல்.

விரை (41)—விதை,

வீசை (14)—நாற்பது பலங்கொண்ட எடுத்தலளவை.

வேவுகாரர் (17)—ஒற்றர்.

# மரியாதைராமன் கதைகளில் இடம்பெற்றுள்ள பழமொழிகள்


| | | கதை வரிசை எண். | பக்க எண். |
|---|---|---|---|
| 1 | அடாத காரியம் செய்தார் படாத பாடு படவேணும் | 10 | 21 |
| 2 | அடிமேலடி அடித்தால் அம்மியும் நகரும் | 8 | 17 |
| 3 | அழுக்கை அழுக்குக் கொல்லும். இழுக்கை இழுக்கு வெல்லும் | 17 | 37 |
| 4 | அறிவுள்ளவனுக்கு அரியதொன்றில்லை | 19 | 42 |
| 5 | ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு | 12 | 25 |
| 6 | ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறந்தால் வருமோ? | 7 | 16 |
| 7 | எட்டியுடன் சேர்ந்த இலவுந் தீப்பட்டது | 9 | 19 |
| 8 | கனமூடன் கைப்பொருளிழப்பான் யோக்கியம் | 11 | 23 |
| 9 | சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கிட்டுக்கொண்டது போல | 4 | 11 |
| 10 | தான்தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை | 14 | 29 |

| | | | |
|---|---|---|---|
| 11 | தானாக வந்த சீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளுவதுபோல் | 2 | 4 |
| 12 | தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் | 2 | 7 |
| 13 | திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை | 3 | 9 |
| 14 | தீரா வழக்கிற்குத் தெய்வமே சாட்சி | 16 | 34 |
| 15 | நாள் செய்தது நல்லுற்றார் செய்யமாட்டார்கள் | 21 | 50 |
| 16 | பகையாளி குடியை உறவாடிக் கெடுக்க வேணும் | 5 | 12 |
| 17 | பள்ளமுள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும் | 6 | 15 |
| 18 | பாலைக்குடித்தவனுக்குப் பாலேப்பம் வரும் கள்ளைக் குடித்தவனுக்குக் கள்ளேப்பம் வரும் | 20 | 46 |
| 19 | பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணும் | 18 | 39 |
| 20 | பொய்நின்று மெய்யை வெல்லுமா? | 15 | 31 |
| 21 | பொருள் போனவழியே துக்கம்போம் | 1 | 3 |
| 22 | மரத்தின் பழம் மரத்தண்டையே விழும் | 13 | 27 |
| 23 | முழுப்பூசணிக்காயைச் சோற்றோடே மறைக்குறது போல | 5 | 13 |
| 24 | யானை தன் தலையிலே தானே மண் போட்டுக் கொள்கிறது போல் | 3 | 9 |

பிற்சேர்க்கை—1.

# இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மரியாதைராமன் பற்றிய குறிப்புகள்

தெரியா திமைக்குற்றம் கண்ணுக்கென் றெய்திடுந் தீவினைகள்
கரியாய் வழக்குக்கள் சொல்பவர்க்கே, கொண்ட காதலன்முன்
சரியாய் மறுச்சொன் னவனுக்குப் பாரிஇத் தையலென்ற
மரியாதி ராமன் கதைபோற், குறுங்கை மலைநம்பியே.

—நம்பிசதகம், பா. எ. 81

" —இந்தப்பார்
மாராசர் மெச்சு மரியாதை ராமனெனத்
தீரா வழக்கைத் தெரிந்துரைத்துப்—......"

—செங்குந்தர் துகில்விடுதூது
அடி எண். 112-114
(தூதுத்திரட்டு)

"—பாரில்
மரியாதைராமனைப்போல் வந்த வழக்காயும்
பெரியோர் இருக்குமூர் பேசி"

—சங்கரமூர்த்தி ஐயரவர்கள்
விறலிவிடுதூது
அடி எண் 798—800
(தூதுத்திரட்டு)

பிற்சேர்க்கை—2.

# மரியாதைராமன் கதைகள் சில முற்பதிப்பு நூல்கள் குறித்த விவரங்கள்

1 "கதாசிந்தாமணி யென்று வழங்கிய மரியாதை ராமன் கதை", மணிமங்கலம் வடிவேலு முதலியாரால் பார்வையிடப்பட்ட நூல், வித்தியாரத்திநாகர அச்சுக்கூடம், சென்னை 1904.

2 கதாசிந்தாமணி, இராசகோபால முதலியாரால் பார்வையிடப்பட்டு அச்சிடப்பெற்ற நூல், வித்வரக்ஷாமிர்த அச்சுக்கூடம், 1915.

3 கதாசிந்தாமணி என்று வழங்குகின்ற மரியாதை ராமன் கதை, B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை,
(பதிப்பாண்டு இல்லை)

4 மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: நெ. சி. தெய்வசிகாமணி, ஸ்டார் பிரசுரம், சென்னை.

5 மதனகாமராஜன் மரியாதைராமன் கதைகள் (புதிய தமிழில், புதிய கதைகளுடன்)

பதிப்பாசிரியர்: அரு. ராமநாதன், பிரேமா பிரசுரம், சென்னை.
முதற் பதிப்பு: 1958 எட்டாம் பதிப்பு: 1989

6 மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: பரதன், பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை, 1977.

7 மரியாதைராமன் கதைகள், பதிப்பாசிரியர்: லேனா தமிழ்வாணன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1980.

8 புகழ்பெற்ற மரியாதைராமன் கதைகள், எஸ். தமயந்தி, சுவாமிமலை பதிப்பகம் சென்னை.
மு. ப. 1985 மூன்றாம் பதிப்பு: 1991

9 மரியாதைராமன் தீர்ப்புக் கதைகள், பதிப்பாசிரியர்: முல்லை முத்தையா, என்சிபிஎச் வெளியீடு, சென்னை 1986.

10 பழமொழிகளில் மரியாதைராமன் நீதிக் கதைகள், ஆசிரியர்: அசோக்குமார், விசாலாட்சி நிலையம், சென்னை, 1989.

11 மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: சிவகுமார், பானுரேகா பப்ளிகேஷன்ஸ், சென்னை.
மு. ப. 1989 மூன்றாம் பதிப்பு: 1991

12 மரியாதைராமன் கதைகள், எழுதியவர்: ஏ. எஸ். வழித்துணைராமன், பாரதி பதிப்பகம், சென்னை, 1990.

13 மதிப்புமிக்க நீதிகள் வழங்கிய மரியாதைராமன் கதைகள், ச. சரோஜா, இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம், 1990.

14 மரியாதைராமன் கதைகள், ஆசிரியர்: அசோக் குமார், தனலட்சுமி பதிப்பகம், சென்னை, 1990.

15 மரியாதைராமன் நீதிக்கதைகள், ஆசிரியர்: மானோஸ், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1990.

16 மரியாதைராமன் கதைகள், தொகுப்பு: ஞான மூர்த்தி, அனுராகம் வெளியீடு, சென்னை. இரண்டாம் பதிப்பு: 1990.

பிற்சேர்க்கை—3.

# மரியாதைராமன் கதைகளுளொன்றை

(கதை எண்: 5)

## ஒத்த பஞ்சதந்திரக் கதை

### 'இரும்பை எலி தின்றது' என்ற கதை

'என்றுமொரு பட்டணத்திற் செட்டி மார்கள்
    இருவரவர் சினேகமாய் இருக்கும் நாளில்
ஒன்றுதுலாம் ஆயிரமாம் இரும்பு கொண்டே
    ஒருவணிகன் வசத்தொருவன் வைத்துப் போய்நாள்
சென்றுவந்தான்; 'வருமுன்னே இரும்பை யெல்லாம்
    தின்றுவிட்ட தெலி'என்றே செப்பக் கேட்டு,
'நன்றதற்கு வந்ததென்ன! போகு தெ'ன்று
    நண்புகொண்டு முன்போல நண்ணி னானே. 202

விருந்துசமைத் தார்கள்; எண்ணெய் தேய்த்துக் கொண்டு,
    மிக்கஅவன் பிள்ளைதனக் கெண்ணெய் தேய்த்துப்
பொருந்துகுளந் தனில்மூழ்க என்றே அந்தப்
    புதல்வனையும் தான்கூட்டிப் போனான்; அங்கே
திருந்தியதோர் இடத்தொளித்து வைத்து மூழ்கித்
    திரும்பிவந்தான்; 'பிள்ளையெங்கே?' என்றான்; பிள்ளை
பருந்தெடுத்துப் போச்சுதெ'ன்றான்; சண்டை யாகிப்
    பட்டணத்து வழக்கர்முன்னே பகர்ந்தான் ஈன்றோன். 203

'பருந்துபிள்ளை தனையெடுத்துப் போமோ? என்ன
பரிகாசம்? என்றுவழக் காளர் சொல்ல,
'இரும்புதுலாம் ஆயிரத்தைக் குறைவை யாமல்
எலிதின்றால், பிள்ளைபருந் தெடாதோ?' என்ன
'கரும்பொன்ஆ னதைமுழுதும் கொடுத்தா யாகில்
கடுகஅவன் உன்பிள்ளை கொடுப்பான்', என்றார்
இரும்புவிலை குறைந்ததனால் ஆஸ்தி விற்றே
இனியபெண்டிர் பிள்ளையும்விற் றிழந்து போனான் 204

—வீரமார்த்தாண்ட தேவர் இயற்றிய
"பஞ்சதந்திரப் பாடல்கள்"

## எலி இரும்பைத் தின்றது என்ற கதை

தொக்கதுஓர் ஆயிரத் துலாம்இ ரும்பினைப்
புக்குஎலி தின்றுதான் போனது என்றிடில்
வைக்கும்ஓர் பிள்ளையை வன்ப ருந்துகொண்டு
அக்கணத்து ஏகுதல் அரியது அன்றரோ. 289

கழறும்அக் கதைஏது என்னில்
கனசதா நிருதம் நாம
எழில்நகர் தன்னில் தக்க
விருபவன்என் றிடும்இ யற்பேர்
தழுவிய வணிகன் வாழத்
தனமது தேட வேண்டி
வழுஇல்ஓர் நண்பன் தன்னை
வரவழைத்(து) இனிது கூறி 290

ஆயிரம் துலாம்இ ரும்பை
அமைத்துவைத்(து) அயல்தே [யத்துப்]
போயினான்; அவ்வி டத்தே
பொக்கணா மதுகிட் டாமல்
ஒய்வொடு மீண்டு, "நண்பா
உன்கண்வைத் திடும்இ ரும்பை
ஏயநீ கொடுவா" என்றான்;
"எலிஅதைத் தின்றது" என்றான். 291

அவ்வுரை கேட்ட பின்றை,
"அதிசயம் இது" என்(று) எண்ணி,
வெவ்விய உத்தி ஒன்று
மிகநினைந்(து), அவன்தன் சேய்க்குத்
தைவரும் எண்ணெய் இட்டுத்
தடத்தினுக்(கு) எடுத்துப் போகிச்
செவ்விதின் ஒருபால் வைத்து
மீண்டுஅவன் இல்கண் சேர்ந்தான். 292

"மன்னுசேய் எங்கே?" என்ன,
அவன் "பருந்(து) எடுத்துப் போயிற்(று)"
என்னலும், அரசன் பால்போய்,
"எனதுசேய் தன்னைக் கொன்றான்
முன்னி"என் றிடுதல் கேட்டு
"மொழி,பருந்து எடுக்கு மோசேய்
தன்னை" என்(று) உரைப்ப, "ஈது
தான்அதி சயம்அன்(று)" என்று 293

அறமுடை வணிகன் ஆனோன்,
"ஆயிரம் துலாம்இ ரும்பை
வறிதுஎலி தின்றால், அன்னோன்
மைந்தனும் அவ்வா(று)" என்றான்,
சிறுநகை கொண்டு இரும்பைச்
சீர்இறை கொடுப்பித் தான்;பின்
குறியதுஓர் மகவையும்தான்
கொண்டுவந்(து) இருத்தி னானால். 294

இருவரும் முன்பு போல
இயைபுற நடந்து கொண்டார்;
துரிசுஅறும் இந்தக் காதை
துலாயோகத்(து) என்று சொன்னேன்.
தரையில்ஊண் அருந்து வாழும்
தமனகச் சம்பு வேஉன்
கருதரும் கிழமை போலக்
கண்டிலேன் கண்டி லேனே.* 295

—செழியதரையன் பஞ்சதந்திரம்

* "செழியதரையன் பஞ்சதந்திரம்" — புலவர் ப. வெ. நாகராசன் அவர்கள் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) பதிப்பித்தது; கையெழுத்துப்பிரதி நிலையில் உள்ளது.

பிற்சேர்க்கை—4.

# மரியாதைராமன் கதைகளுளொன்றை

(கதை எண் : 20)

# ஒத்த விக்கிரமாதித்தன் கதை

## மதனசேனை கதை

### முருகவணக்கம்

விளங்கு சூரியன் எழுவது மாய்வதுங் கண்டு
வளர்ந்து நீங்குவ தறிந்துனைப் போற்றிலே னாளாய்ப்
பிளந்து குன்றமூ டுருவவே லெறியுமெம் பிரானே
வளர்ந்த பன்னிரு புயத்தனே வள்ளிநா யகனே. 1

### வேதாளம் விளம்பிய பத்தாம் கதை

புத்தி யாற்றலாற் புரவலன் மீண்டுமக் கானில்
கொத்த ருத்தனி லேறியே யலகையைக் கொண்டு
மெத்த கங்குலின் வீரியன் முன்வரும் போதில்
பத்தெ னுங்கதை கேளென வலகையும் பகரும். 2

சிகர கோபுர மதில்முதல் செம்பொன்னா லயங்கள்
நிகரி லாவயி டூரிய மேடைகள் நிறைந்து
நகர மெங்குமந் நகரையே நிகரிலை யென்ன
மகர மென்றொரு பதியுள மாநில மதனில். 3

காரி யங்களுங் காலமு மிடமுமே யறிந்து
பாரில் நீதியு முதாரமும் படைத்துல காள்வோன்
சேர லர்க்கொரு சிங்கமே யனையதோர் செம்மல்
வீர னென்பவ னந்நகர் மேவுகா வலனே. 4

அத்தி தத்தியே மரக்கல மங்குநின் றோட
வித்தை தத்துவ ஞானமே மிகுந்தவ னாகி
யெத்த லத்தினு மென்னவந் நகரினில் வாழ்வோன்
அத்தி தத்தனென் றொருவனவ் வணிகரிற் றலைவன். 5

சதுர னாகிவாழ் தத்தனல் தவப்பய னாலே
பதுமை யாங்குண தத்தனென் றேயொரு பாலன்
அதிவி தத்துட னங்கவன் தோன்றிய பின்னர்
மதன சேனையென் றொருமகள் தோன்றினள் மாதோ. 6

பெருந்த வத்தினால் பெற்றதோர் பிள்ளையும் பெண்ணும்
மருந்து போலவே வளருநாள் மதனசே னையைத்தான்
பரிந்து தந்தையுஞ் சமுத்திர தத்தற்குப் பரியம்
பொருந்தி யீவனென் றன்புடன் வளர்த்தனன் புகழால். 7

மருமி குத்திடு மணத்தையும் மலரையும் போலப்
பருவ முற்றிய தேனையும் பாலையும் போல
வொருமை பெற்றிடு முடலையு முயிரையும் போலத்
தரும தத்தனென் றொருவனாங் குணதத்தன் தோழன். 8

பள்ளி யோதியே பலகலை நூல்களும் பயிற்றித்
தெள்ளி தாகிய செட்டிமத் தொழில்களுந் திருத்தி
மெள்ள வேவய தெண்ணிரண் டானது வென்னத்
துள்ளி யேவிளை யாடிநற் றோழமை புரிந்தான். 9

புரைவ றப்பின்பு போதமும் ஒன்றியே பொருந்தி
இரவு மற்றவன் பகலுமென் னாமலெப் பொழுதும்
தரும தத்தனுந் தோழனாங் குணதத்தன் மனையில்
வரவும் போகவுந் தடையின்றி வாழ்கின்ற நாளில். 10

அரம்பை போலவு மன்னமே போலவு மாசைக்
கரும்பு போலவுங் காமவேள் விழைரதி போலும்
விரும்பி யம்மனை கழங்குபந் தாடிமெய்ப் பருவந்
திரும்பி மேடைமேல் மதனசே னையுந்திகழ் வுற்றாள். 11

மதன சேனையர் மங்கைய ருடன்விளை யாடி
மதன சேனையு மகிழ்ந்தினி திருந்திடும் போதில்
மதன சேனையாற் றருமதத் தனும்வருந் திடவே
மதன சேனையைக் கண்டனன் மதிமயக் குற்றான். 12

காண்ட லும்மிவன் மார்பிடைக் கன்னிதன் கண்கள்
தாண்டி யோடியூ டுருவவே தைத்தவக் காலை
வேண்டி யேயுலை மெழுகதாய் விரகந்தான் கொண்டு
மீண்ட னன்தரு மதத்தனா மென்னுமக் குமரன். 13

## வேறு

இந்த மதன சேனையா லிரங்கு கின்ற போதிலே
அந்த மதன சேனையா னடைய வந்த தாகவே
கந்த மதனை யேபனிநீர் கலந்து பூச வாடியே
பந்த மதனை யுந்துறந்து பந்த னைக்கு ளாயினான். 14

தரும தத்தன் வாடுமெய்த் தளர்ச்சி கண்டி ரங்கியே
பெருமை பெற்ற தோழன்வந்து பேசியிங்கி தேதெனக்
கரும முற்ற தேகிடாது கன்றி வெம்பு கின்றபோ
தருமை யுற்று நொந்துவினவி யவனும் மீண்டு
போயினான் 15

அற்றை நாளி லங்கோர்நா ளாறு நூறு கங்களாய்
மற்ற நாள்வி டிந்தபின்பு மதன சேனை பாலடைந்
துற்றபோ தணைத்த வேளை யொன்று கண்டுநின்றுதான்
நற்றி யென்னை மருவிடென்று நயமு ரைத்து
வேண்டினான். 16

நலமி குத்த மதன சேனை நாடி நாடி யங்ஙனே
தலையிறக்கி யேற நின்று தரும நீதி யுரைசெய்வாள்
குலம தற்க டாதவாறு கூறு சொல்வர் தாதைபால்
நிலம தித்த றிக்கை பண்ணி நீம ணந்து புணருவாய். 17

தாதை யென்னை முன்னமே சமுத்திர தத்த னுக்கென
வாதி நாளு ரைத்தசொல் லறிந்து நீயு ரைப்பாயோ
நீதி சொல்லொ ருவர்தாரம் நினைக்கத் திண்ண மல்லவோ
போதி போதி யென்ன வாசை பொங்கி யங்கை பற்றினான்.

நாரி யஞ்சி யஞ்சி யேந
டுங்கி நின்று பகருவாள்
காரி நேர்ச முத்திர தத்தர்
கடிம ணஞ்செய் தருளினார்
ஆரி ருட்டி லீச னாணை
யங்கு முந்தி யிங்குனைச்
சேர்வ னென்று சத்தி யங்கள்
செப்ப நம்பி யொப்பினான். 19

## வேறு

ஒப்பி நின்று தரும தத்த
னொருமையோ டகன்றபின்
செப்ப மான மதன சேனை
சிறிதுநா ளிருந்துபின்

வைப்பெ னுஞ்ச முத்திர தத்தன்
வந்துநன்ம ணஞ்செய்தே
கைப்பி டித்தரு ளிதத்தன் கன்னி
யோடு மேவினான். 20

கன்னி யான மதன சேனை
கணவன்முன்வ ணங்கியே
யுன்னு வேளை கண்டு நாண
முற்றிடாம லுரைசெய்தாள்
என்னை முன்பு தரும தத்த
னிச்சையிற்கைப் பற்றியே
தன்னை மேவி டென்ற போது
சத்தியச்சொல் செப்பினேன். 21

தந்தை தாய்ச முத்திர தத்தன்
தாரமாய ளித்தநாள்
முந்தி வந்து வுந்த னருகு
மோகம்நான்த ணிக்கிறேன்
இந்த வாய்மை தான்ம றாம
லின்றுநீநி றுத்தென
அந்த வாறி சைந்து நீய
னுப்பவேணு மென்றனள். 22

உள்ள வாறு நன்றெ னாதொ
ளித்திடாம லுரைசெய்தாள்
கள்ள மில்லை மனதி லென்று
கணவனு மிசைந்தனன்
தள்ளி யேகி டென்ற போது
தனித்துமாது மிருளிலே
மெள்ள வன்ன மென நடந்து
மேவுகின்ற போதிலே. 23

## வேறு

அல்லினில் மின்னல் போல
அரிவைதான் வருகை கண்டு
தொல்லையிற் கள்வன் சர்வ
சுவாமியென் றொருவ னாங்கே
நில்லென வோடி வந்து
நிறுத்தினா னவனை நோக்கி
வல்லியிவ் வுடைமை வேண்டில்
வாங்கிப்போ வென்று சொன்னாள். 24

காரிகை யலங்கா ரத்தைக்
கண்ணினாற் கள்வன் நோக்கிச்
சீரியல் திருவோ வானோர்
தெரிவையோ புவியின் மானோ
ஆரிவ ளென்று தன்னுள்
அதிசயித் தவனுஞ் சொல்வான்
சேரெனை யல்லா திந்தச்
செம்பொனாற் பயனே தென்றான். 25

தன்னையே தரும தத்தன்
தழுவவே தலைநாள் தன்னில்
உன்னிய வாறுந் தானங்
குரைத்ததும் மகிழ்ந னார்க்குச்
சொன்னதும் பின்ன வன்றான்
சொன்னபின் னொப்பு மாறும்
கன்னிகை பகர்ந்து மீண்டு
காதலைத் தணிப்பே னென்றாள். 26

மேனியி னிளமை தானும்
    மிக்கதோர் கீர்த்தி தானும்
ஆனநல் லுயிர்கள் தாமும்
    ஆற்றுநீர்ப் பெருக்கந் தானும்
மானனை யார்கள் தாமும்
    வாரியிற் போட்ட பொன்னும்
போனபின் மீளு மோதான்
    பூவையே புகன்றி டென்றான். 27

இக்கணம் நின்பால் வந்திங்
    கெய்திலே னாகிற் கோவைச்
சிக்கென வதைசெய் தோரும்
    செய்ந்நன்றி குன்றி னோரும்
விக்கினம் பண்ணி யீவை
    விலக்கின மூடர் தாமும்
புக்கதோர் நரகு தன்னில்
    புகுதற்குக் கடவே னென்றாள். 28

கொம்பனை யாளு நின்று
    கூறிய வாறு கேட்டு
நம்பியே கள்வன் தானும்
    நாரியைப் போய்மீ ளென்ன
வம்பமர் குழலி னாளம்
    மதனசே னையுமப் போது
தம்பதம் நோவ மேவித்
    தருமதத் தனைப்போய்க் கண்டாள். 29

மெல்லணை மீது ளானை
விழிதுயி லெழுப்பிச் சொல்வாள்
நல்லதோர் மணமு மின்று
நடந்தது தலைநாள் தன்னில்
சொல்லிய மொழியால் நின்னைத்
தோய்ந்திட வந்தே னென்னைப்
புல்கென வுரைக்க மாதைப்
போற்றியே தருமன் சொல்வான். 30

குருவைமுன் னிகழ்தல் தானும்
கோயிலி னுடைமை தானும்
அருமறை யோர்கள் சொத்தும்
அடைக்கலப் பொருள்கள் தாமும்
நரபதிக் கிரண்டு தானும்
நம்பினர் குற்றந் தானும்
ஒருவர்தம் தாரந் தானும்
உளத்திலும் நினைக்கொ ணாவே. 31

அரிவையே தனியெண் ணாம
லாரிருள் தன்னி லேதான்
வருவையோ வருகி லும்நீ
வந்ததே சத்தி யத்தின்
உரையெனக் கொப்ப தாச்சு
வொல்லையில் செல்வா யென்றான்
கருதியே மீண்டு மாது
கள்வன்பா லிரவில் வந்தாள். 32

மட்டவிழ் தரும தத்தன்
மனையிற்றான் சென்ற வாறும்
கிட்டியே யவனை வாவென்று
கேட்டதும் பின்னை யன்னான்
எட்டிய பரதா ரத்தை
யுளத்திலும் நினையே னென்று
கட்டுரைத் ததுவும் நின்று
கள்ளனுக் குரைத்து நின்றாள். 33

சதிருடன் முன்னாள் செய்த
சத்திய நெறியி னாலே
புதுமையா லவன்மே வாதே
போமெனு மறிவால் வார்த்தை
யுதவியே தன்பால் வந்த
வுறுதியால் மனம்வே றாகி
வதைசெயக் கள்வன் தானும்
வாங்கிடா தனுப்பி விட்டான். 34

தங்கிய வுயிர்போய் மீளச்
சரீரத்தி லுறைந்தாற் போலும்
மங்கிய பொருள்கள் வந்து
மடியினி லிருந்தாற் போலும்
பொங்கிய புலியின் வாயில்
புக்கது மீண்டாற் போலும்
அங்கவள் சமுத்திர தத்த
னருகினி லெய்தி நின்றாள். 35

தழுவிடத் தரும தத்தன்
சாற்றிய நெறியின் வாறும்
வழியிலே கள்வன் கண்டு
வளைத்தது மவன்பாற் செய்தி
மொழியவே யவனும் மெச்சி
முனிந்திடா தனுப்பு மாறும்
செழியனாம் மகிழ்ந ளார்க்குச்
சேயிழை யடைவே சொன்னாள். 36

வெற்பென வந்த விந்த
விக்கின மிடையில் தள்ளித்
தற்பர னருளி னாலே
சார்ந்தனள் தீங்கி லாமல்
கற்புளா ளிவளே யென்று
கணவனு மதிச யித்துப்
பொற்புயந் தன்னில் மாதைப்
புணர்ந்துவீற் றிருந்தா னங்கே. 37

தாரத்தை யிசைந்தே யேவும்
சமுத்திர தத்தன் தானோ
சோரத்தை வெறுத்து விட்ட
செல்வனாந் தத்தன் றானோ
நேரிட்ட பொருளுக் காசை
நினைந்திடாத் திருடன் தானோ
ஆரிவர் தம்மில் நல்லா
ரரசவென் றலகை கேட்கும். 38

ஒருசொல்லா ரருக னாலே
உழலுமன் னவனுஞ் சொல்வான்
துரிசற நாண மின்றிச்
சொல்கையால் மகிழ்நன் தானும்
அரிதென விசைந்தான் நன்றி
அறிவிறல் தரும தத்தன்
விரிவிய ஞான முற்றி
வெறுத்தனன் பரதா ரத்தை. 39

செப்பிய விருவர் தம்மைச்
சிறப்பென வுரைக்கொ ணாது
ஒப்பிய தயவில் லாமல்
உயிர்களை வதைத்து நாளும்
வைப்பெனப் பறித்து நாளும்
வயிறது வளர்த்து வாழ்வோன்
கைப்பொருள் தன்னை விட்ட
கள்வனே நல்ல னென்றான். 40

ஆமென வலகை தானு
மரசனை வியப்புற் றேதான்
காமுறு வேசி மார்கள்
காணொணா மனத்தைப் போலும்
ஓமெனும் மாயை போலும்
ஓடியே மீண்டு மந்தத்
தேமிகு தருவின் மீதே
சேர்ந்துவீற் றிருக்குந் தானே. 41

—வேதாளக்கதை

பிற்சேர்க்கை—4அ.

# ஒத்த விக்கிரமாதித்தன் கதை

[முற்காட்டப்பெற்ற கதையே சில மாறுதல்களுடன் உரைநடை வடிவில் அமைந்த நிலை.]

வேதாளத்தை முருக்க மரத்திலேறி **விக்கிரமாதித்தன்** மறுபடியும் பிடித்துக் கட்டிக்கொண்டு வரும்போது, அது அவனைப்பார்த்து "பூபதி! இப்பொழுது ஓர் அதிசயமான கதை சொல்லுகிறேன் கேளும்" என்று சொல்லுகிறது:—

"மகத தேசத்திலுள்ள கௌசலம் என்ற நகரத்தில் **தீர வீரன்** என்ற அரசன் இருந்து அரசாட்சி செய்து வருங்காலத்தில் **தனதத்தன்** என்றொரு வணிகனிருந்தான். அவன் அநேக நாள் தவஞ்செய்து **தத்தன்** என்றொரு பிள்ளையையும், **மதனசேனை** என்றொரு பெண்ணையும் பெற்றான். அவர்களை வெகு செல்வமாக வளர்த்து வரும்போது **மதனசேனை** விவாகத்துக்குரிய பருவத்தையடைந்தாள்.

**சமுத்திரதத்தன்** என்றொருவன் அவளைத் தனக்கு விவாகம் செய்துகொடுக்கும்படி **தனதத்தனைக்** கேட்டதற்கு அவன் சம்மதிக்கவே பரியம்போட்டு முகூர்த்தநாள் குறிப்பிடப்பட்டது. பிறகு அவன் போய்விட்டான்.

இப்பால், ஒருநாள் **மதனசேனை** தோழிகளுடனே பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது, அவள் சகோதரனது பிரிய நண்பனாகிய **தருமதத்தன்** என்பவன், அவள் பந்து விளையாடும் மேடையின் அருகே வந்து,

அவளைக்கண்டு மிகவும் பிரியம் கொண்டவனாய் அவளை அழைத்துத் தனக்கு ஒரு முத்தம் தரும்படிக்கேட்டான். அதற்கு அவள் " உமக்கு ஒரு முத்தந்தருவதற்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் ஏற்கனவே ஒருவன் எனக்குப் பரியம் போட்டிருப்பதால் அவன் திருமங்கில்யம் சூட்டுவதற்கு முன் பரபுருஷரைத் தீண்டினால் கன்னித்தன்மை அழிந்துவிடும். ஆதலால் அவனை விவாகம் செய்த பிறகு அவனைத் தீண்டுவதன் முன் உமது கருத்தை நிறைவேற்றுவேன் " என்றாள். அவனும் அதற்கிணங்கிப் போய் விட்டான்.

குறிப்பிட்ட தினத்தில் சமுத்திரதத்தன் வந்து அவளை விவாகம் செய்துகொண்டான். தம்பதிகள் இருவரும் பள்ளி அறையை அடைந்ததும் மதனசேனை கணவனைப் பார்த்து "எனதன்பிற்குரிய நாயகா! அடியாள் உம்மிடம் செய்துகொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு அதாவது நான் பருவமுற்றிருக்கின்ற காலத்தில் ஒருவன் என்னை நெருங்கித் தனக்கு ஒரு முத்தம் தந்து போகும்படி வேண்டினான். நான் கன்னித்தன்மை அழிந்துவிடுமென றஞ்சி விவாகமானபின் நாயகனைத் தொடுவதன்முன் அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாக வாக்களித்தேன். ஆதலால் அவ்வாக்குப் பிறழாமற் போய்வரவேண்டும். விடைகொடும்" என்றாள். சமுத்திரதத்தன் அவளது கள்ளங்கவடற்ற மனத்தைக்கண்டு சந்தோஷித்து அவ்விதமே விடைகொடுத்தனுப்பினான்.

விடைபெற்று அவள் அர்த்தராத்திரி வேளையில் தருமதத்தன் வீட்டை நோக்கிச் செல்லும்பொழுது, வழியில் கள்வன் ஒருவன் அவளை மறித்துக்கொண்டான். அவள் பயந்து தனது நகைகளையெல்லாம் கழற்றிக்கொடுத்தாள்.

அவன் அவைகள் வேண்டாம் என்றும் அவள் தனக்கு ஒரு முத்தம் தந்து போக வேண்டுமெனவும் கூறினான். அதற்கு அவள் தான் போகிற காரியத்தை அவனுக்குச் சொல்லி அது நிறைவேறிய பிறகு அவன் எண்ணத்தை முற்றுவிப்பதாக வாக்களித்தாள். அவனும 'சரி' யென்றனுப்பிவிட்டு அவள் வரவைக் குறித்து அங்கேயே காத்திருந்தான். பின்னர் அவள் **தருமதத்தனைப்** போய்க்கண்டு "சொன்ன வாக்குத் தப்பாமல் வந்துவிட்டேன்" என்றாள். அவன் அவளது உறுதியையும் கள்ளமற்ற மனத்தையும் நினைத்து அஞ்சி அவளைச் சகோதரியாகப் பாவித்து மரியாதை செய்தனுப்பி விட்டான்.

அவனிடமிருந்து மீண்டு வருகையில் **மதனசேனை** திருடனைக்கண்டு, **தருமதத்தன்** கூறியதைக் கூறி "இனி உனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்றாள். அவனும் அஞ்சி, அவள் வாக்குறுதியை மெச்சித் தான் களவாண்டு கையில் வைத்திருந்த சில நகைகளையும் அவளிடம் கொடுத்தனுப்பிவிட்டான். அவள் புருஷனிடம் சென்று தான் செல்லும் வழியில், திருடனைக் கண்டது முதலிய சகலமுங்கூறிக் கள்ளன் கொடுத்த நகைகளையும் அவனிடத்தில் கொடுத்தாள். **சமுத்திரதத்தன்** அவளது பழுதற்ற குணத்தைக்கண்டு மிகவும் சந்தோஷப்பட்டான். "**சமுத்திரதத்தன், தருமதத்தன்,** கள்ளன் இம்மூவரில் யார் சிறந்தவர்?" என்று வேதாளம் கேட்க, **விக்கிரமாதித்தன்**, "அடித்துப்பறிக்கிற கள்வன் தன் கையிலிருந்த நகைகளைக் கொடுத்து அவள் வாக்குறுதிக்குச் சந்தோஷப்பட்டனுப்பிய தால் அவனே சிறந்தவன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது வேதாளங் கட்டவிழ்த்துக்கொண்டு ஓடி மறுபடியும் முருக்க மரத்தில் ஏறிக்கொண்டது.

—**பத்தாவது, மதனசேனையின் கதை**
**விக்கிரமாதித்தன் கதை**

பிற்சேர்க்கை—5.

# ஆங்கிலத்தில் மரியாதைராமன் கதைகள்

1. செய்யுள் வடிவில் செய்யப்பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு நூலிலிருந்து மாதிரிக்கு முதற்கதை மட்டும்

## ONE OF FOUR THIEVES THE REST DECEIVES

Four lodgers with an ancient dame
Received contentedly what came,
Were gainers by what others lost,
And boarded at the public cost.
Now coins and jewels music yield.
Within a brazen vessel seal'd;
But they must keep the common prey
To charm them on a safer day.
" Ho, bury this beneath the floor,
Till call'd for, mother, by all four."
They said, and still their lodgings kept,
And ate and drank, and watch'd and slept.
Once on a day, as o'er the way
In a verandah's shade they lay.
And of the common good conversed,
The faithful four were plagued with thirst,

"Who'll go to the old dame, snd say
That we must have a pot of whey?"[1]
Was ask'd; and flying like a shot,
One said to her, "Produce the pot."
Pledged not to part with it at all
Without an order from them all,
Into the street she trusty went,
And ask'd if for the pot they'd sent,
"Yes, give it him, and don't be slow."
So, turning back, an iron crow
She lent her lodger, and reveal'd
The place where she'd the jar conceal'd.
"With this you'll turn it up with ease,"
Said she; and he was on his knees.

---

1. Buttermilk, esteemed none the worse for being sour, is a favourite drink in India for quenching thirst. It is usual to take it early in the morning; and no doubt the dry souls had passed a feverish night. With the exception of the messenger, they had now allowed their wits to go to sleep. The direction they gave him,—tondi yeduttuk kondu va.—was ambiguous; one of its words, tondi, being either a verbal participle or a noun. The noun means a small earthen vessel; the participle having dug in the ground. The words therefore not only signify, "Bring a small jar". but equally "Dig up, and bring." The intended meaning was evident from the addition, "to get some whey;" bnt that addition the rouge suppressed, it not being true always that there is honour among thieves.

The metal in his hands he feels,
And then the mettle in his heels;
Through the back door he bears the prize;
And like a thief of thieves he flies.
Minutes twice twelve the thirsty three
Had waited, wondering not to see
Their partner with a pot supplied,
When all got up, and went inside.
The cheat perceived· the dame they cursed;
And vengeance now was all their thirst
They hail'd her to the judgment-bar.
And swore she'd stolen their brazen jar.
The Lord Chief Justice weigh'd the case,
Look'd the poor woman in the face,
And said he could not let it pass.
She must restore the pot of brass.
" O dear; what shall I do?" she cries,
And tears are streaming from her eyes.
As bright a youth as e'er you'll meet
Was in the middle of the street,
With playmates busy at the game
Of pitch and toss:[1] he ask'd the dame,
" Good grandmother, why all these tears?"

---

1. ketcheyk-kay, something like a game of marbles; instead of marbles, areka nuts being used. The aim in it is, from a fixed distance to pitch the nuts into one or more of two or three holes scooped in the ground.

She with her story fill'd his ears.
Then, turning to his play anew,
As from his hands the nuts he threw,
Exclaim'd the grieved precocious soul,
" May these as surely find the hole
As earth his mouth shall quickly choke
Who this unrighteous sentence spoke!"[1]

Some busybodies to the throne
Made Raman's daring comment known.
The boy was to the monarch led,
And thus the awful Cholan said,
" Who thinks the sentence so unjust,
Himself the case may try, and must."
The child of Menu, unappall'd,
The matter sifted, set her free,
And thus address'd the baffled three:
" She will, as pledged, the jar restore,
When told to do so by all four."

Grief goes the way that treasures go,[2]

---

1. The allusion is to the situation of a buried corpse uncoffined, with the face turned up; and the wish conveyed the opinion that the gods would not allow so unrighteous a judge to live very long. The prophecy of the youth was fulfilled. The mouth of the unfortunate gentleman was filled with dirt; he was as good as dead.

2. I. Wealth in possession is grief, in the anxiety it occasions. The grief ceases when the wealth disappears. II. When property is stolen, the greater affliction is with the stealer. The unfortunate loser is less unhappy than the miserable thief.

They say: the lady found it so.
The king with joy the tidings heard.
The title of "The Just"[1] conferr'd
On Raman, made the bench his own,
Sent gifts of honour from the throne,
With special countenance caress'd,
And held him a familiar guest.

—"The Unerring Judge
Mariyathay-Raman"
TAMIL WISDOM
Pages: 129—133

---

1. mariyathay, The Unerring.

## 2. உரைநடை வடிவில் உருவாக்கப்பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு நூலிலிருந்து மாதிரிக்கு முதற்கதை மட்டும்

## THE THIEVES OUT—WITTED

A Gang of four thieves in the Chola country, boarding for the time at an old woman's house, one day, entrusted her with the safe custody of a sealed brass pot containing their plunder, with strict injunctions that it was only to be returned on the joint demand of all four of them. One morning, as the thieves were seated on the pial in front of the house, a butter-milk seller passed along the street and wishing to have a drink; they sent the youngest of them to fetch a vessel from the boarding-house woman. The young thief saw his opportunity in this and, entering the house, informed the old lady that his companions had sent him to fetch the brass pot left with her. She, however, demurred to this and referred to the original understanding, upon which the arch rogue referred her to his friends seated outside. She shouted out to them asking if she might deliver the pot to their messenger and they, thinking only of a pot they wanted for buying butter-milk, shouted back a reply in the

affirmative. The safe deposit was accordingly returned. and the messenger disappeared with it through the back door of the house. The remaining three, after waiting in vain for the return of their companion with the required vessel, entered the house and were thunderstruck on learning what had actually happened Resolved, however to make the old lady pay for their own folly, they dragged her before the City Judge. The latter after due enquiry. pronounced judgement in favour of the thieves. As the unfortunate woman was returning home loudly bewailing her misfortune and the injustice of the Jndge's verdict, a bright and precociously wise-looking youth, named Raman, who was engaged in a game of marbles with his playmates, questioned the woman and learnt the cause of her grief. He, too, appeared moved by the woman's tale of injustice, and cried out as his marble dropped into its appropriate hole, "May Heaven's thunderbolt strike the unjust Judge who decided against the widow, as certainly as my marble has found its goal." The Royal Harkaras, who happened to hear this as they passed by, took the youngster up to the king and reported his words. The king was amused, and thus addressed Raman: "Well, young Sir! Consider yourself the Judge in this case, and deal evenhanded justice, if you can do it better." Raman, nothing daunted by

the royal mandate, cheerfully took a seat then and there, summoned the parties and recorded their statements, and his judgment, delivered without a moment's doubt or hesitation, was that inasmuch as the original compact was that the ssfe-deposit was not to be returned unless and until the whole quartette of thieves jointly demanded it, the present Plaintiff's should be non-suited.

The king was so charmed at this remarkable display of wisdom and shrewdnees on the part of Raman, that he literally loaded him with honors and presents, in consequence of which he was ever after known as Mariada Raman or the Honored Raman, and he also conferred on him the office of a judge in his realm. Many were the difficult cases of hard swearing in which Mariada Raman proved by his shrewdness his peculiar fitness for the discovery of truth and for dealing even-handed justice.

—Tales of Mariada Raman
Pages 1—4

# துணை நூற்பட்டியல்

**திருக்குறுங்குடி நம்பி பேரில் நம்பிச்சதகம்,** குட்டம் பேரூர் 'வரராமயோகி' என்னும் வலியமேலெழுத்து யோகீச்வரன் ராமன்பிள்ளை அவர்கள் இயற்றியது, திருவனந்தபுரம் ஸ்ரீதர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1944.

**தூதுத்திரட்டு,** பதிப்பாசிரியர்: தி. சந்திரசேகரன், அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை, 1957.

(செங்குந்தர் துகில்விடுதூது, சங்கரமூர்த்தி பேரில் விறலிவிடுதூது உள்ளிட்ட ஆறு தூது இலக்கியங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.)

**பஞ்சதந்திரப்பாடல்,** வீரமார்த்தாண்ட தேவர் இயற்றியது. பதிப்பாசிரியர்: மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்., சென்னை, முதற்பதிப்பு 1958.

**விக்கிரமாதித்தன் கதை,** மினெர்வா அச்சுக்கூடம், சென்னை, 1913.

**வேதாளக்கதை,** பதிப்பாசிரியர்: மா. இராசமாணிக்கனார், அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை, 1961.

* மற்றும் மரியாதைராமன் கதைப் பதிப்புகள் பலவும் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) யும்.

TALES OF MARIADA RAMAN, 21 Amusing stories, by P. Ramachandra Rao, G. A. Natesan & co, Esplanade, Madras.

(பழமையான இந்நூலில் வெளியான ஆண்டு குறிக்கப்பெறவில்லை)

TAMIL WISDOM, by Edward Jewitt Robinson, First Edition: Printed in London by Mr. R. Needam, printer, Peternoster Row, 1872.

Second Edition enlarged with Tamil Texts: Dec., 1957. The South India Saiva Siddhanta works Publishing Society, Tinnevelly, Limited, Tirunelveli, Madras-1.